உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 34 | இராக்ஷச - வைகாசி - 10—6—75 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

ஆனித் திருமஞ்சனம்

சிதம்பரம் :

நடராஜப் பெருமான் சிதம்பரத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்றான். சித்து என்பது அறிவு. அம்பரம் என்பது ஆகாயம். எனவே நடராசப் பெருமான் சிதம்பரத்தில் – அறிவு வெளியில் (ஆகாயத்தில்) ஆடுகின்றான். சிதாகாசத்தையே சிதம்பரம் என வழங்குகின்றோம். தலவிருட்சம் தில்லையாதலின் ஊருக்குப் பெயர் தில்லை. தல்லை என்று யாரும் அழைப்பதில்லை. நடராஜப் பெருமான் ஆனந்தக் கூத்து நிகழ்த்துவதற்கு இடமாக இருக்கின்ற காரணம் பற்றி சிதம்பரம் என்றே வழங்கப்படுகிறது. ஒரு மனிதனுக்கு இருதயத்தானம் மிகமிக இன்றியமையாதது. விராட் புருஷனுக்கு இருதயத்தானமாக விளங்குவது சிதம்பரம். இங்கு நடராசப் பெருமானுடைய ஆட்டம் என்றும் ஒய்வதில்லை. இவருடைய ஆட்டத்தினால்தான் உலகம் இயங்குகிறது.

இவருடைய ஆட்டமில்லையேல் உலக இயக்கமே நின்றுவிடும். இதைப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயே இறையருளால் நம்முன்னோர்கள் உணர்ந்து கூத்தப்பெருமானைத் தரிசித்து வந்திருக்கின்றனர். இன்றைய விஞ்ஞான உலகத் தவலுங்கூட அணு அசைந்துகொண்டே இருப்பது. அதன் அசைவு நின்றால் உலகமே அழிந்துவிடும். அணுவின் இயக்கத்தால்தான் உலகம் இயங்குகிறது என்கின்றனர்

இருதயத்தானம் :

உலகத்தில் ஓரிடத்தில் - சிதம்பரத்தில் இருந்துகொண்டு நடராஜப்பெருமான் நடித்தாலும் ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்விலும் நடித்துக்கொண்டுதான் இருக்கிறான். தனி மனித வாழ்வில் அவரவருடைய இருதயத்தில் - தகராகாசத்தில் - சிறிய ஆகாசத்தில் நடிப்பு - துடிப்பு நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. அது நடராஜப்பெருமானுடைய ஆட்டம் அங்கங்கே அவனவனுடைய நாடித் துடிப்பின் மூலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது. மருத்துவத்துறையினர் இத் துடிப்பு இரத்தம் 'பம்ப்' செய்யப்பெறுவதால் ஏற்படுகிறது என்கின்றனர் அது நின்றுவிட்டால் மனித இயக்கம் நின்றுவிடுகிறது. மனித உறுப்புக்களுள் தலை, இருதயம் முதலியன இன்றியமையாதன எனவே எல்லாக் கோயில்களிலேயும் நடராஜப்பெருமான் இருதயத்தானமாக இருக்கும் முக்கியத்துவம் தெளிவாகும். நடராஜப் பெருமானின் திருக்கூத்தை எழுவகைத் தாண்டவம் என்றும், 108 தாண்டவம் என்றும் கலைவல்லுநர் கணக்கிட்டு இருக்கின்றனர். நடராஜப் பெருமான் அழிப்பதற்கு ஒரு கூத்து ஆக்குவதற்கு ஒரு கூத்து என்று இவ்வாறு பல்வகைக் கூத்துக்களை நிகழ்த்துகின்றார். எனவே உலக இயக்கமும் பலவகையாக நிகழ்கின்றது.

ஆனந்தக் கூத்து :

நடராஜப் பெருமான் பொன்னம்பலத்தில் ஆடும் கூத்து ஆனந்தக் கூத்து. அது உயிர்கள் இன்புறுதற்கு நிகழ்த்துகின்ற கூத்தாகும். அந்த ஆனந்தக்கூத்தை உயிர்கள் நேரே பெறுவது கடினமாகும். எனவேதான் இறைவனோடு இணைபிரியாது விளங்குகின்ற சிவகாமி அம்மையார் பக்கத்தில் நின்றுகொண்டு ஆண்டவன் ஆடுகின்ற ஆனந்தக் கூத்தைக் கண்டு அவ்வானந்தத்தை ஏற்று நம்மைப்போன்ற குழந்தைகளாகிய உயிர்களுக்குப் பக்குவமறிந்து - தாமறிந்து எந்த அளவிற்குத் தேவையோ, அந்த அளவிற்குக் கொடுத்துவருகிறாள்

உயிர்கள் சிற்றறிவும், சிறு தொழிலும், சிறு ஆற்றலும் உடையன. ஆதலால் இன்பமாயினும், துன்பமாயினும் அதிகம் வந்தால் அதனை ஏற்க முடியாதனவாக மிகுக்கின்றன. ஆகவேதான் இந்தப் பேரின்ப அனுபவத்தைச் சிவகாமி அம்மையார், தான் ஏற்றுக் குறிப்பிட்ட அளவிற்கு, தரமறிந்து வழங்குகிருள். இதனை ஒரு பாடலில் குமரகுருபரர் ஓர் உவமையின்மூலம் விளக்குகிறார்.

"அடுத்தவின் னுயிர்கட் களவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வ! நின் குஞ்சிதபதமே
இத்தொழிலைந் தும் நின் மெய்த் தொழிலாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொரு தென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த!"

இரண்டு அல்லது மூன்றுமாதக் குழந்தைக்கு நோயுண்டானல், அதைப்போக்குவதற்குத் தமிழ் மருத்துவ முறைப்படி மருந்தை நேரே குழந்தைக்குக் கொடுத்தால் அதன் குடல் தாங்காது. அதனுல் அம்மருந்தைத் தாய் உண்பாள் மருந்து தாயின் இரத்தத்தில் கலந்து, அது பாலாகப் பரிணமித்து, தாய்ப்பாலாகிய குழந்தையின் உணவோடு கலந்து நோயை நீக்குகிறது. அதுபோலவே நடராசப் பெருமானின் ஆனந்தத்தை நேரே பெறுவோமாஞல் நம்மால் தாங்க முடியாது என்பதற்காக அம்மையார் ஏற்று தகுதியறிந்து வழங்கி வாழ்விக்கிருள். நடராசப்பெருமான் மார்கழி மாதத்திலும், ஆனி மாதத்திலும் தரிசனம் வழங்குகின்றார்.

ஆறுபொழுதிலும் அபிஷேகம் ;

இந்தப் பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு முந்நூற்று அறுபத்தைந்து நாள் ஆகின்றது. இது நம்முடைய ஓராண்டுக் காலம் ஆகும். சான்றோர்கள் இலக்கியங்களில் இந்த ஒருவருடத்தை ஆறு பெரும் பொழுதாகப் பிரித்திருக்கின்றனர். மார்கழி தை முன்பனிக்காலம், மாசி பங்குனி பின்பனிக்காலம், சித்திரை வைகாசி இளவேனிற்காலம், ஆனி ஆடி முதுவேனிற் காலம்,

ஆவணி புரட்டாசி கார்காலம். ஐப்பசி கார்த்திகை மழைக்காலம் என்று பெரும் பொழுது வகுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆறு பெரும் பொழுதைக் கொண்ட ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகக் கணக்கிடப் பெறுகிறது. நடராசப் பெருமான் மனிதர்களுக்குரிய ஓராண்டுக் காலத்தில் - தேவர்களுக்குரிய ஒரு நாளில் ஆறு முறை அபிஷேகம் கொள்வர். ஒரு நாளுக்கு சிறு பொழுது ஆறு என்றும், இலக்கியங்களில் பகுக்கப் பெற்றிருக்கின்றன. அவையாவன:- வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்பனவாகும். இந்தச் சிறுபொழுது ஆறிலும் திருக்கோயில்களில் ஆறுகால பூஜைகள் நிகழ்கின்றன. இதைப் போலவே நம்முடைய ஓராண்டுக்காலமாகிய தேவர்களுக்குரிய ஒருநாளில் பெருமான் ஆறுமுறை அபிஷேகம் கொள்கின்றார். இதனை ஆறுபொழுதில் கொள்ளும் பூசனையாகப் பரஞ்சோதி முனிவர் கூறுகிறார்.

“ எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லிற்கங்குற்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீதேறத்துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமைசெய்வாம் ”

அபிஷேக நாட்கள் :

தேவர்களுக்குரிய ஒருநாளில் மார்கழி மாதம் வைகறைப் பொழுதாகிறது. எனவே மார்கழியில் நடைபெறும் அபிஷேகம் வைகறையில் செய்யப்பெறும் அபிஷேகமாகும். அது உஷக் கால பூஜை எனப்படுகிறது. இவ்வாறே பிற மாதங்களில் நிகழும் அபிஷேகங்களைக் கொண்டால் மாசி மாதத்தில் நிகழ்வது காலசந்தி வழிபாடு என்றும், சித்திரையில் நிகழ்வது நண்பகல் வழிபாடு என்றும், ஆனியில் நிகழ்வது பிரதோஷகால (ஏற்பாடு) வழிபாடு* என்றும், ஆவணியில் நிகழ்வது மாலை (இரண்டாங்காலம்) வழிபாடு என்றும், புரட்டாசியில் நிகழ்வது அர்த்தயாம வழிபாடு என்றும் கொள்கின்றோம். யாமவேளை, வழிபாட்டுக்குரிய காலம் அல்ல ஆதலால் மாலை வழிபாட்டுக்குரிய காலத்தின் முடிவில் யாமவழிபாடு செய்வது பழக்கத்தில் இருந்து வருகிறது. எனவே நம்முடைய ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒருநாள் என்று கொள்ளும் கணக்குப்படி ஐப்பசி கார்த்திகை தேவர்களுக்கு யாமப்பொழுதாகும் ஆதலால் யாமப்பொழுதில்

---

* ஏற்பாடு – சூரியன் மறையும் வேளை.

செய்யப்படும் வழிபாடு புரட்டாசி மாதத்தில் செய்யப்பெறுகிறது. நடராசப்பெருமானுக்கு நிகழும் அபிஷேகங்கள் மூன்று நட்சத்திரத்திலும், மூன்று திதியிலும் நடைபெறுகின்றன. இதனைக் கீழ்வரும் வெண்பாவால் நன்குணரலாம்.

சித்திரையில் ஓணமுதற் சீரானி யுத்திரமாம்
சத்ததனு வாதிரையும் சாரவாகும் - பத்திவளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி மன்று
ஈசர் அபி ஷேக தினமாம்.

மார்கழி - திருவாதிரையிலும், சித்திரையில் - திருவோணத்திலும், ஆனியில் - உத்திரத்திலும் ஆக மூன்று நட்சத்திரங்களிலும், மாசி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் சதுர்த்தசி திதியிலுமாக நடராசப்பெருமானுக்கு ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

ஐந்துசபைகளும் ஆனித் திருமஞ்சனமும் :

இப்பொழுது நிகழவுள்ளது ஆனித்திருமஞ்சனம். மார்கழியில் நிகழ்வது தரிசனம் என்றும், ஆனிமாதத்தில் நிகழ்வது ஆனித் திருமஞ்சனம் என்றும்வழங்கப்பெறுகிறது. இவ்விரண்டு காலங்களிலும் ஆயிரக்கால் மண்டபத்திற்கு நடராசப்பெருமான் எழுந்தருளி அபிஷேகங்கொள்வர். மற்றயவை கனகசபையில் நிகழ்வன.

நடராசப் பெருமான் திருக்கூத்து வழங்கும் இடங்களாக உள்ளவை ஐந்து.

சிதம்பரம்	—	கனகசபை
மதுரை	—	இரசத சபை
திருநெல்வேலி	—	தாமிர சபை
திருக்குற்றாலம்	—	சித்திர சபை
திருவாலங்காடு	—	இரத்தின சபை

இந்தச் சபைகளிலும் இவ் இருநாட்களில் நடராசப் பெருமான் எழுந்தருளி திருக்கூத்து வழங்குவார் ஆயினும் தில்லையில் நிகழும் அபிஷேக தினமாகிய ஆனித் திருமஞ்சன நாளில் நடராசப்பெருமானின் ஆனந்தக் கூத்தை அனைவரும்தரிசித்துப் பேரின்பமும் பெருமையும் பெற்று உய்வார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன முதற்குரவர்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைப் பெருவிழாவில்

சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

ஆசியுரை

21—5—75

" வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். "

குருபூசைப் பெருவிழா :

தருமையாதீனத்தை நானூறு ஆண்டுகளுக்குமுன்னர் இந்த ஞானபூமியில் ஞானப்பண்ணையாக நிறுவியவர்கள் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர் வேதநெறி தழைக்கவும், சைவத்துறை விளங்கவும் அனுபூதிப் பாடல்களால் அயராது பணிசெய்தவர்கள். அப்பெருமானது குருபூசை பெருவிழா பத்துநாட்கள் கொண்டாடப்படுகின்றது. இவ்விழா குருஞானசம்பந்தப்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள ஞானபுரீசுவரர் ஆலயத்தில் பிரமோற்சவமாக – பெருவிழாவாக அபிஷேக ஆராதனைகள் திருவீதியுலா முதலியவற்றுடன் நடைபெறுகிறது. நமது திருமடத்திலும் குருஞானசம்பந்தரால் பூசிக்கப்பெற்ற சொக்கநாதப்பெருமானுக்கும் இப்பத்துநாட்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப்பெறுகின்றன.

விழாவின் புனிதத்தன்மை :

பெரியோர்களின் நினைவுநாளைக் கொண்டாடுவதும் அவர்களுக்குப் பெருவிழா எடுப்பதும் அவர்களது லட்சியத்தைக் கடைப்பிடிப்பதற்கும் கொள்கைகளைப் பரப்புவதற்குமேயாகும். அதற்காகவே விடுமுறையும் விடப்படுகிறது. ஆனால் அந்த விழாக்களுக்குரிய விடுமுறை நாட்களில் அவர்கள் லட்சியத்தைக் கடைப்பிடிக்க கலை நிகழ்ச்சிகளையும், நாடகங்களையும் ஏற்பாடு செய்து அதன்மூலம் அவர்கள் லட்சியத்தில் நமமை ஈடுபடுத்த முயன்றனர் நம்முன்னோர். ஆனால் இதுபொழுது சினிமாபார்த்தல் முதலிய கேளிக்கைகளில் மக்கள் மிகுதியாக ஈடுபடுகின்றனர். இது நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் சமயத்திற்கும் நல்லதல்ல. அவ்விழாவின் புனிதத்தன்மையை உணர்ந்து செயல்படுதலே ஏற்றதாகும். பெரியோர்களின் நினைவு நாட்களில் - விழா நாட்களில் அவர்களது கொள்கைகளைக் கடைப்பிடிப்பதோடு அவர்களது அருளுபதேசங்களை — அருள் நூல்களை ஓதுதல் கேட்டல் முதலியவற்றில் ஈடுபடவேண்டும். இதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் வழிபாடாகும்.

> " ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல்
> நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்று
> ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
> இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை "

என்கின்றார் அருணந்திதேவர்.

சமயப் பயிற்சி வகுப்பு :

குருஞானசம்பந்தர் குருபூசைத் திருநாளில் அவர்களது கொள்கைகளைப் பரப்பவும், அருளுபதேசங்களை உணர்த்தவும் அவற்றிற்கு மூலமாகிய வேதம் ஆகமம் இதிகாசங்களையும் திருமுறை சாத்திரங்களையும் நாமும் உணர்ந்து பிறரையும் உணரச்செய்கின்ற வகையில் அவர்க்குச் செய்யும் வழிபாடாக — ஞானபூசையாக இவ்வகுப்பு ஆண்டுதோறும் திருவருளால் நடைபெறுகிறது இவ்வகுப்பிற்கு முன்னூறு பேருக்குமேல் விண்ணப்பித்திருக்கின்றனர் இது மக்களிடையே உள்ள சமய உணர்வு பெறும் ஆர்வத்தைப் புலப்படுத்துகிறது. சென்ற ஆண்டுகளைவிட மிகவும் அதிகமானபேர் இதில் ஈடுபட்டிருப்பது மக்கள் அதிகமான அன்பத்திற்கு ஆளாகியுள்ளனர் என்பதையும் காட்டுகிறது.

வரப்பிரசாதம் :

துன்பம் வரும்போதுதான் மனிதன் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுகிறான். இறைவனை எண்ணுகிறான். இன்பம் வரும் போது எண்ணுவது இல்லை, தங்கம் தணலிலே உருக்கப்பட்டு இறுதியில் ஆபரணமாக விளங்கும்போதுதான் அதன் பெருமை உயர்கிறது. அதேபோல துன்பத்தில் உழன்று உழன்று அவைகளோடு போரிட்டு வெற்றி கண்ட மனிதன்தான் வீரனாகவும் விவேகியாகவும் விளங்குகின்றான். அவனால்தான் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பயன் ஏற்படும். துன்பத்தைக் கொடுத்துத் தான் மனிதர்களைத் தூய்மைப்படுத்துகிறான் இறைவன். எனவே துன்பம் வந்தபோது துவண்டுவிடாது அதை வரப்பிரசாதமாக ஏற்கவேண்டும்.

கருணைகாட்டவே தண்டனை :

தாய் உடலை வளர்ப்பவள். தந்தை உணர்வை வளர்ப்பவன். தந்தையில்லாது தாய்மட்டும் வளர்த்த பிள்ளைபோல மக்கள் ஆகிவிடக்கூடாது. மக்கள் தவறுசெய்யும்போது கருணை காட்டவே தண்டிக்கிறான். அத்தண்டனையும் தாங்கமுடியாத அளவிற்கு வழங்குவதில்லை. இறைவன் நம்மைத்தண்டிக்கிறான் என்பதனால் அவன் கொடுமையாளன் அல்லன். நாம் திருந்தி வருந்தி அவன் அருள் பெறவேண்டும் என்பதற்காகத்தான் தண்டிக்கின்றான். இங்கு ஞானசம்பந்தர் பாடல் ஒன்றை நினைவு கொள்ளல் மிகவும் பொருத்தமாகும்,

> "கள்ள அரனே கருணையுடன் என்னறிவில்
> உள்ள சுகந்தந்த விட ஒண்ணாதோ — மெள்ள
> வருத்துவதும் தீவினையில் வாட்டுவதும் ஞானம்
> பொருத்துவதும் ஏன்தான் புகல்"

இறைவனைப்பார்த்து முதலில் கள்ள அரனே என்று விளிக்கின்றார். 'இறைவனே, நீ உயிர்கள்மீது வைத்துள்ள எல்லையில்லாத கருணையினாலேயே பிறப்பினைக் கொடுத்து துன்ப நிலையையும் அடையச்செய்கிறாய் எனக்கு உறுதியாக — முடிவாகக் கொடுக்கக்கூடிய பேரின்ப நிலையை இன்றே கொடுத்துவிடுதல் கூடாதோ? உயிரை வருத்துவதும் தீவினையில் வாட்டுவதும் பிறகு ஞானம் பொருத்துவதும் எதற்காக? கடைசியில் கொடுக்கும் ஞானத்தை முதலில் கொடுத்துவிடுதல் கூடாதோ' என்றும் கேட்டு ஓர் உயிரை வருத்துவதும், தீவினையில் வாட்டுவதும்

அவ்வுயிரைப் பக்குவப்படுத்துவதற்காகவே. உயிர் பக்குவப் பட்ட பிறகு ஞானம் பொருத்துகிறான் என்றும் அறிவிக்கின்றார்.

கண்டிப்பும் கருணையும் தேவையே. இப்பொழுது நாட்டில் வறட்சியும் கஷ்டமும் ஏற்பட்டுள்ளன. மக்கள் தவறுசெய்யும் போது - கடமையை மறக்கும்போது - மறுக்கும்போது மழை நிறுத்தம் போன்ற இன்னல்களைக் கொடுப்பது இயல்பு; இது நிவர்த்தியாகக்கூடியதேதவிர நிரந்தரமானதல்ல. நம் கடமையை மறக்காமலும் மறுக்காமலும் இருப்பதற்காகவே நம்மை அவன் கண்டிப்பதும், தண்டிப்பதும் செய்கிறான் மனிதனுக்குத் துன்பத்தைக்கொடுத்தால் தான் நன்மையான செயலுக்குத் திரும்பு வான்; எனவே துன்பம் வரும்போது அதற்கென வருந்தி சோம்பியிராமல் நாம் நம் கடமையைச் செய்யவேண்டும். கடமை யைச் செய்வதன்மூலம் இறையருள் பெறலாம்.

உறுதிப்பொருள்கள் நான்கு:

மனிதன் அடையவேண்டிய உறுதிப் பொருள்கள் நான்கு என, வேதாகம சாத்திரங்கள் வலியுறுத்துகின்றன. அறம் என்பது வடமொழியில் தர்மம் என்று சொல்லப்பெறும். அறம் என்றால் ஒருவரிடம் உள்ள பொருளை - அறிவை - ஆற்றலை பிறர் நலனுக்கு ஈதல். அதுதான் அறம் என்று சொல்லப்படும். அறம் புரியப் பொருளை ஈட்டி அப் பொருளைக் கொண்டு அறத்தைச் செய்ய முற்படவேண்டும் அறம் செய் தற்கு இயலவில்லையானால் விரும்பவாவது செய்யவேண்டும். அது கருதியேதான் "அறம் செய விரும்பு" என்கிறார் ஔவைப் பிராட்டியார்.

பொருள் என்பது மனிதவாழ்க்கையை வளப்படுத்தி உரு வாக்குவதற்குச் செவிலித்தாய் போலத் துணைநிற்பது. அப் பொருளை எப்படி வேண்டுமானாலும் ஈட்டலாம் என்பது இல்லை. தீவினை விட்டு நல்வழியிலேயே ஈட்டவேண்டும் - அடைதல் வேண்டும். அறவழியில் ஈட்டிய பொருளைக் காத்தலும் அறம் செய்தல் முதலியவற்றிற்கு வகுத்தலும் செய்தல் வேண்டும். அதுபோல மனிதன் தான் அடையவேண்டிய இன்பத்தையும் அறத்துறை வழியிலேயே அடையவேண்டு மல்லது மறத்தின் வழியே அடைதல் கூடாது. இம்மூன்றையும் அறநெறி வழு வாமற் செய்யின் வீடுபேறு தானே வந்தடையும். இந்த அறம் முதலான நான்கையும்பற்றிய விளக்கத்தைஔவைப்பிராட்டியார் எளியமுறையில் நமக்கு அறிவிக்கிறார்.

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் – தாதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

இப்பாடலுக்கு 'ஈதல் அறம்' என்றும், தீவினைவிட்டு ஈட்டல் பொருள் என்றும், 'காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்றும் பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு என்றும் பொருள் கொள்வது இயல்பு. இருப்பினும் நம்முடைய முயற்சியால் நாம் இவற்றைப் பெறுகின்றோம் என்று எண்ணுமல் இறைவன் திருவருளாலேயே இவை நிகழ்கின்றன என்று எண்ணுவதே ஏற்றது. இதை இப்பாட்டில் பரனை நினைந்து என்றசொல் அறிவிக்கிறது. 'பரனை நினைந்து' என்பதை இடைநிலைத் தீவகமாக அமைத்து, பரனை நினைந்து ஈதல் அறம், பரனை நினைந்து தீவினை விட்டு ஈட்டல் பொருள், பரனை நினைந்து காதலிருவர்கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம், பரனை நினைந்து இம் மூன்றும் விட்டதே பேரின்பவீடு என்று பொருள் கொள்ளவேண்டும். காரணம் அனைத்தும் அவனுளால் நிகழ்வனவே யன்றி நம்முடைய செயலால் இயலாது என்பதாகும். அப்பர் சுவாமிகளும் இக்கருத்தை ஒருபாடலால் வலியுறுத்துகிறார்.

எல்லாப்பொருள்களிலும் இறைவன் இருக்கின்றன்:

"கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனிமுடிக வித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே".

கனியைக் காட்டிலும், கரும்பைக்காட்டிலும் பாவை நல்லாரைக் காட்டிலும், அரசைக்காட்டிலும் இடைமருதில்உள்ள பெருமான் இனியன் என்று உறழ்ச்சிப் பொருள்கொள்ளும் முறை உண்டு. இம்முறை யல்லாமல் கனியிடத்தும், கரும்பிடத்தும், பாவை நல்லாரிடத்தும் அரசிடத்தும் இன்பத்தைத் தோற்றுவிப்பவனுக இடைமருதுப்பெருமான் இருக்கின்றுன் என்று பொருள்கொள்ள வேண்டும். பரனை நினையாமல் இருத்தல் கூடாது; கனி முதலான பொருள்களிலெல்லாம் இறைவன் இருக்கின்றுன் என்பதை இப்பாடலால் நினைவு படுத்துகிறுர் எல்லா இன்பத்துன்ப நிலையிலும் இறைவனை மறந்துவிடக்கூடாது என்பதே இதன் கருத்தாகும். இந்நிலையைச் சுந்தரர் வாழ்வில் காண்போம்.

இறையருள் :

சுந்தரர் ஒரு மனைவிக்கு இரு மனைவியரைக் கொண்டிருந்தபோதிலும் பரமனை நினைந்து வாழ்ந்துவந்தார் வாழ்விலும்-தாழ்விலும் இன்பிலும்-துன்பிலும், நனவிலும்-கனவிலும் எவ்விடத்தும் இறைவனையே எண்ணியிருந்தார். அதனால்தான் இறைவன், தன்னைச் சுந்தரருக்குத் தோழமையாகக் கொடுத்து நமக்குஎல்லாம்சுந்தரரை ஆசாரியராக இருக்கும் தன்மையையும் தந்தருளினார். அப்பெருமக்கள்மீது நம்முடைய அறியாமையால் குறை கூறுவதை விட்டுவிடவேண்டும். சுந்தரர் தாம் இன்பம் நுகரும்போது இறைவனின் அருளாக எண்ணினார் என்பதற்கு அவரது பாடலே அகச்சான்றாக விளங்குகிறது.

" ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்றஒண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றியூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலிமென்தோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர்ஐயன் அருளதே. "

உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருளை ஓர்ந்துணரும் இன்பத்தையும் சங்கிலி தடமென்தோள் தடமுலை ஆரும் இன்பத்தையும் ஒருசேர அடைந்தேன் என்றும் இவற்றை ஆமாத்தூர் ஐயன் அருளாக எண்ணினேன் என்றும் அவர் குறிப்பிடுவதைக்கண்டு மகிழலாம். இந்நிலை மற்றவர்களுக்கு வராது. நம் வாழ்வில், எல்லாம் இறையருளால் நிகழ்கின்றன என்பதை நாம் உணர்ந்து செயல்படவேண்டும்.

இங்கு நடைபெறும் சமயப் பயிற்சி வகுப்பில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெறுகின்றீர்கள். பெரும் புலவர்களாக உள்ள அறிஞர்கள் பலர் பயிற்றுவிப்பவர்களாக உள்ளனர் அவர்கள் மூலம் சமய தத்துவங்களையும், சைவ சித்தாந்த நுட்பங்களையும் உணர்ந்து பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களாகிய நீங்கள் பயன் பெறவும், பயிற்றுவிப்பவர்களும் நல்வாழ்வு வாழவும், இவ்வகுப்பு எல்லா வகையிலும் சிறப்புற நிகழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

திருவேட்களம்*

திரு. என். இராமகிருஷ்ண

சிதம்பரம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே 2 மைல் தூரத்தில் உள்ளதும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளதும் ஆகிய இடமே திருவேட்களம் ஆகும்.

இத்தலத்தில் விளங்கும் ஸ்ரீ பாசுபதேசுவரரையும் ஸ்ரீ நல்ல நாயகி அம்மையையும் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ளார்கள். இத்தலத்து முருகன்மேல் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.

சிவபெருமான் வேடனைவந்து அருச்சுனனுக்குப் பசுபதாஸ்திரம் அருளிய தலமாதலின் இறைவன் பாசுபதேசுவரர் என வழங்கப்பெறுகிறுர். அருச்சுனனுக்கும் சிவபெருமானுக்கும் போர் மூண்டது; அப்போது அருச்சுனன் தன் வில்லால் இறைவன் தலையில் அடித்தான் அருச்சுனனுடைய தவத்தையும் வில்லின் திறமையையும் மெச்சிப் பாசுபதம் அருளினுர் என்பது புராண வரலாறு அருச்சுனன் அடித்த தழும்பு என்று அடையாளம் காட்ட இலிங்கத்தின்மேல் கோடு இருக்கும். இதைப் "பார்த்தப் பிரகர" லிங்கம் என்பர். திருநாவுக்கரசர் இத்தலத்தை "வேடனுருறை" வேட்களம் என்று பாடியுள்ளார்.

சிவபெருமான் வேடனுகவந்த செய்தி பாரதத்தில் இருக்கிறது. அருச்சுனனேடு போர்செய்ததை "கிராதார்ஜுனியம்" என்னும் வடமொழிக் காவியம் விரிவாகச் சொல்லுகிறது.

திருஞானசம்பந்தர் பாடியுள்ள தேவாரத்தில் இத்தலம் கடலுக்குப்பக்கலில் உள்ளதாகக் கூறப்படுகின்றது அங்கு வேத கோஷங்களும் வேள்விகளும் சிறப்பாக அக்காலத்தில் நடைபெற்றனவாம். ஆனுல் இப்போது திருவேட்களத்திற்கும் கடலுக்கும் இடையில் உள்ள தூரம் சுமார் நான்குமைல். கடலுக்குப் ஊருக்கும் நடுவில் ஓர் உப்பங்கழி உள்ளது ஒரு சிறிய காடும் உள்ளது. சென்னையையும் திருமுல்லைவாயிலையும்

---

* தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

இணைக்கும் ஒரு சிறு வாய்க்காலும் உள்ளது. தற்போதுள்ள மணற்பாங்கான இடத்தைக் காணும்போது சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் இந்த இடம் கொள்ளிடத்தன் படுகையாக இருந்திருக்கலாம் என்று அறிகிறோம்.

திருவேட்களத்திலுள்ள ஆலயம் மிகவும் அழகாக உள்ளது. தென்னைமரச் சோலையின் நடுவில் உள்ளது. கோயிலுக்குமுன் அழகான தீர்த்தம் உள்ளது. இதன்பெயர் "இருபாகடாக்ஷ தீர்த்தம்". தற்போதுள்ள கருங்கல் திருப்பணி ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் செய்யப்பட்டது. செட்டி நாட்டு அரசர்கள் இக்கோயிலில் விசேஷ கவனம் செலுத்தி யுள்ளார்கள்.

கோயிலில் சில அரிய படிமங்கள் உள்ளன. சிவபெருமான் கிராதமூர்த்தியாகப் பார்வதியுடன் கோலங்கொண்டுள்ள திருவுருவங்கள் உண்டு. பாசுபதம் பெறச் சிவபெருமானைத் துதிக்கும் கோலத்தில் உள்ளான் அருச்சுனன். கிராதமூர்த்தியினுடைய படிமம் பல்லவர்காலத்தில் செய்யப்பட்டதாகக் கருதுவர். அதாவது அப்பர்பெருமான் காலம் அருச்சுனனுடைய படிமம் சோழர் காலத்தில் செய்யப்பெற்றிருக்கவேண்டும். இவை கோயிலின்பக்கலில் இருந்த ஒரு மண்மேட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்டுப் பின்பு கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பெற்றன என்று கூறுவர் வரலாற்று ஆசிரியர்கள்.

கல்வெட்டு ஆராய்ச்சியினுல் தெளிவாகும் செய்திகள் வருமாறு :-

சுமார் அறுபது ஆண்டுகளுக்குமுன் இந்த இடம் ஒரு சிறிய கிராமமாக இருந்தது. கர்ப்பக்கிருகத்தின் ஒரு பகுதமட்டும் இருந்தது. 1913 இல் பாசுபதேசுவரர்கோயிலில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்லில் திருவேட்களம் கிராமம் முழுவதும் சிதம்பரம் சிவகாமி அம்மன் திருமூலஸ்தானம் கோயிலுக்கு அச்சுதப்ப நாயக்கரால் தானமாகக் கொடுக்கப்பட்டதாக உள்ளது. இவர் தஞ்சாவூரை ஆண்ட முதல் நாயக்க மன்னனுன சிறு சேவப்ப நாயக்கருடைய மைந்தன் (கி. பி. 1566.)

இத்தலத்தின்பக்கலில் அநேக இடங்கள் புராணவரலாற்றை நினைவூட்டுகின்றன. அருச்சுனன் தவம் செய்து வேடனுரைத் தரிசித்த இடம் திருவேட்களம். உசுப்பூர் என்ற இடத்தில் சிவன் காட்டுப்பன்றியை வெளியே விரட்டினுர். நக்கர் உகந்தகுடி — நக்கத்தம்குடி என்ற இடத்தில் அருச்சுனனுக்கும் சிவனுக்கும்

சண்டை ஏற்பட்டதாம். இதுதான் அருச்சுனன் வில்லால் அடிபட்ட இறைவன் உகந்த இடம். ஈசன்போர்வெளி என்ற இடத்தில் சிவனும் அருச்சுனனும் நேருக்குநேர் போரிட்டனர். வில்லிறுத்தான்குட்டை இங்கு சிவன் தன் வில்லை வளைத்து ஒடித்தான். சங்கரன்குட்டை என்ற இடம் சிவபெருமான் குதிகால் அழுந்தியதால் ஏற்பட்டது.

புலவர் பாரவி என்பவரால் இயற்றப்பட்ட கிராத அர்ஜுனியம் என்ற நூலில் இப்போர் பற்றிய சுவையான விவரங்களைக் காணலாம். கல்வெட்டு நிபுணர்கள் தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள் இத்தலம் பற்றிக் கூறியுள்ளார்கள். The Journal of the Annamalai University என்ற வெளியீட்டிலும் (1934) இத்தலம் பற்றிய விபரங்கள் உள்ளன.

"ஓதமுங் கானலுஞ் சூழ்தரு வேலை
யுள்ளங் கலந்திசை யாலெழுந்த
வேதமும் வேள்வியு மோவா
வேட்கள நன்னக ராரே"

"திரைபுல்கு தெண்கடல் தண்கழி யோதந்
தேனலங் கானலில் வண்டுபண் செய்ய
விரைபுல்கு பைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன்னக ராரே" — சம்பந்தர்.

சிற்றூராகிய இதனைத் திருஞானசம்பந்தர் வேட்கள நன்னகர் என்று பாடியுள்ளார். அவருடைய தீர்க்கதரிசனத் திருவாக்குப் பலித்தது. இப்போது இது நகராகவே ஆகிவிட்டது. அண்ணாமலை நகர் என்று இந்தியா முழுவதும் அறிந்து பாராட்டும் நகர் அல்லவா?

இத்தலம் மூங்கில் வனம் எனவும் பெயர் பெறும். இறைவன் பெயர்: பாசுபதேசுவரர் இறைவி பெயர்: நல்லநாயகி.

திருஞானசம்பந்தசுவாமிகள் சிதம்பரத்தில் இருப்பதற்கு அஞ்சி இத்தலத்திலேயே தங்கிச் சிதம்பரத்தைத் தரிசித்தார் என்பது பெரிய புராண வரலாறு.

தருமையாதீனம் இருபத்தைந்தாவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்கள் இத்திருக்கோயில் திருப்பதிகங்களைச் சலவைக் கல்லிற் பொறித்துப் பதித்துள்ளார்கள்.

தருமையாதீனத்தில்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூசைப் பெருவிழாவை முன்னிட்டு, 21—5—75 புதன்கிழமை முதல் 31—5—75 சனிக்கிழமை ஈறாக பதினொரு நாட்கள் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு, கருத்தரங்கம், வழக்காடுமன்றம், பட்டிமண்டபம், உரையரங்கம், கவியரங்கம், பண்ணிசை அரங்கு. இன்னிசைக் கதை, பொம்மலாட்டம், இசை அரங்கு முதலிய பல்வேறு அரங்கங்களோடு நாளும் மாலை 6-30 மணிக்குத் தொடங்கி, தருமையாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நாள் தோறும் எழுந்தருளி, மாநாட்டு நிகழ்ச்சிகளைச் செவிமடுத்து, ஆசியருளினார்கள்.

தருமையையும், அதன் சுற்று வட்டாரங்களையும் சார்ந்த சைவப் பெருமக்களும், ஆதீன சிஷ்யர்களும், சமயப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள வந்திருந்த பயிற்சியாளர்களும் நாளும் நாளும் திரளாகக் கூடி விழா நிகழ்ச்சிகளிற் பங்கேற்றுப் பயன் கொண்டனர்.

நாள்தோறும் விழாவில் பங்கேற்க வந்திருந்த பெருமக்களை ஆதீனத் திருக்கூட்டத்தைச் சார்ந்த வித்துவான். தவத்திரு. இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளும், வித்துவான், தவத்திரு. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் மற்றும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான். திரு வி சா. குருசாமி தேசிகர் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தியும் - நன்றிநவின்றும் சிறப்பித்தனர்.

21—5—75 புதன்கிழமை மாலை முதல்நாள் நிகழ்ச்சிகள் கருத்தரங்கமாகத் தொடங்கியது சென்னை, முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ஆர் சதாசிவம் பி ஏ பி எல், அவர்கள் தொடக்கவுரையாற்றுகையில் "சைவசமயத்தின் சிறப்பியல்புகளை எடுத்துரைத்து, அன்றும் இன்றும் சைவசமயத்தின் வளர்ச்சி நிலை

எவ்வாறாக அமைந்திருந்தது – இருக்கிறது என்பதனையும், உணர்ச்சி பூர்வமாக நாம் ஒன்றுபட்டு நமது தொன்மைச் சமயத்தை மேலோங்கச் செய்யவேண்டும் என்பதனையும் வலியுறுத்தினார்கள்".

சிறப்புரையாற்றிய திருமதி சௌந்திரம்கைலாசம் அவர்கள் உலகில் உள்ள சமயங்களுக்கிடையில் சைவம் பெற்றிருக்கும் சிறப்பியல்புகளையும், சைவசமய மூர்த்திகள் – வழிபாட்டு முறைகள் சடங்குகள் – திருக்கோயில்கள் முதலியன வழங்கும் ஆழ்ந்த உட் கோள்களையும் விளக்கினார்கள்.

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம் ஓ எல், அவர்கள், சங்ககால இலக்கியங்களிலும், இலக்கணங்களுள்ளும் காணப்படும் அகச்சான்றுகளும், பழைய வரலாற்றாசிரியர்களின் குறிப்புக்களும், தொல்பொருள் ஆராய்ச் சிக் குறிப்புக்களும் சைவ சமயத்தின் தொன்மையை மிகப் பழங் காலம்வரை கொண்டு செல்ல உதவுவதைச் சான்றுகள் காட்டி 'சங்ககாலச் சைவநிலை' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

இடைக்காலத்தில் பௌத்த-சமணர்களால் மறைக்கப்பெற்ற சைவத்தின் மேன்மை, தேவார மூவர்களது அவதாரத்தால் புத்தெழுச்சி பெற்ற வரலாறும், சைவசமயத்தின் உன்னத நிலையும், தமிழ்வேந்தர்கள் குறிப்பாகச் சோழப்பெருமன்னர்கள் இயற்றிய சைவத்தொண்டும், சைவத்தின் உயர் கொள்கைகள் சாத்திரங்களாக வரையறுக்கப் பெற்றசிறப்பும், இடைக்காலத்தே சைவத்திற்குப் புதுவளங்களாக விளைந்த வரலாற்றை 'இடைக் காலச் சமயநிலை' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச். டி., அவர்கள் விளக்கி னார்கள்.

கயப்பாக்கம் திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் 'பிற்காலச் சைவ நிலையினை' விளக்குகையில் மூவேந்தர்களது ஆட்சி ஒடுங்கிய பின்னர் சைவத்திருமடங்களும், குறுநில மன்னர் களும், சைவசமயவளர்ச்சியில்காட்டிய ஊக்கத்தைவிளக்கினார்கள்

இரவு 9-00 மணி அளவில், திருச்சி வானொலி நிலைய தேவார இன்னிசைப்பயிற்சி ஆசிரியர், திரு. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் குழுவினரின் பண்ணிசை அரங்கு நடந்தேறியது. முதல்நாள் நிகழ்ச்சிகள் இரவு 11-00 மணி அளவில் இனிதே நிறைவெய்தின.

(தொடரும்)

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீன முதற்குரவர்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவின்போது



இருபத்தாருவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு சிவிகையில் எழுந்தருளியபோது,
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
வழிபாடு நிகழ்த்துதல்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன முதற்குரவர்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவின்போது



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்
ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களும் அன்பர்களும்
பக்தர்களும் புடைசூழ
இருபத்தாறுவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசமாக எழுந்தருளுதல்

வான்முகில் வழாது பெய்க

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்.

உலகம் வாழ :

> "மல்குக வேத வேள்வி; வழங்குக சுரந்து வானம்;
> பல்குக வளங்கள்; எங்கும் பரவுக அறங்கள்; இன்பம்
> நல்குக உயிர்கட் கெல்லாம்; நான்மறைச் சைவம் ஓங்கிப்
> புல்குக உலகம் எல்லாம்; புரவலன் செங்கோல் வாழ்க"

என்பது பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்தின் முதல் வாழ்த்துச் செய்யுள். "வேதத்தில் கூறப்பெறும் வேள்விகளைச் செய்தால் வானம் சுரக்கும்; வானம் சுரந்தால் வளங்கள் பல்கும்; வளங்கள் பல்கினால் அறங்கள் பரவும்; அறங்கள் பரவினால் உயிர்கட்கெல்லாம் இன்பம் ஏற்படும். இன்பம் நிலைத்தால் செம்பொருள் ஆகிய சைவம் ஓங்கும்; சைவம் ஓங்கினால் செங்கோல் வாழும்" என்று இச்செய்யுளுக்குத் தொடர்ச்சியாகப் பொருள் கொள்ளல் வேண்டும். இதனால் வேத வேள்விகளால் மழை பொழியும் என்பதும், மழை பொழிந்தால் பிற எல்லா நலன்களுமே சித்திக்கும் என்பதும் பெறப்படுகின்றது.

மேகம் :

காளிதாசன் இயற்றிய மேக சந்தேசம் (மேகவிடுதூது) "மேகம் என்பது புகை, அனல், நீர், காற்று ஆகியவற்றின் சேர்க்கை" என்று தெரிவிக்கிறது. அப்பகுதி வருமாறு:-

தூம ஜ்யோதி: ஸலிலமருதாம் ஸன்னிபாத; க்வமேக: என்பது அப்பகுதி.

வேத வேள்விகளில் நெய், சமித்துகளால் உண்டாக்கப் பெறும் புகை (தூம:) மேக உருவடைந்து மழை பெய்து உலகைப் புரக்கிறது. என்று யஜுர்வேத மந்தரம் கீழ்வருமாறு கூறுகிறது:-

" இயர்த்தி தும மனுஷம் பரிப்ருத்
யோஹி அயம் தும முத்கமயதிஸ: மெகோ பூத்வா வர்ஷதி"

இக்கருத்தைத்தான் பரஞ்சோதிமுனிவர் 'மல்குக வேத வேள்வி, வழங்குக சுரந்து வானம்' என்பதால் உணர்த்தினர்.

எனவே வான் முகில் வழாது பெய்வதற்கு வேதங்களில் எத்தகைய வேள்வி வரையறுக்கப்பெற்றிருக்கிறது எனக்கண்டு அம்மார்க்கத்தைப் பின்பற்றி நலம் பெற வேண்டியது நம் கடமையாகிறது.

ருக் வேதத்துள் ...

நான் மறையுள் முதன் மறையாகிய ருக் வேதம் 'த்ருவாஸஒத்வா' என்கிற நாற்பத்திரண்டு அட்சரங்களைக் கொண்ட வருண மந்திரத்தால் ஹோமங்கள் செய்து மழை பெய்யுமாறு கட்டளையிடுகிறது மேலும் மிகுமழைபெய்வதற்காக,

"ஸமித்பி: வேதஸோத்தாபி: க்ஷீராக்தாபி. தினத்ரயம்
ஜுகுயாத் வ்ருஷ்டி ஸம்ஸித்யை மந்த்ரவித் விஜிதேந்திரிய:

என்று அறிவிக்கிறது. " இந்திரியங்களை வென்று மந்திரங்களை அறிந்தவன் ஆத்து நொச்சியால் உண்டான - பாலில் நனைக்கப் பெற்றதான – ஸமித்துக்களாலே மூன்று தினங்கள் மழை பெறுவதற்காக ஹோமம் செய்ய வேண்டும் " என்பது இப்பகுதியின் பொருளாகும். அங்ஙனம் ஹோமம் செய்யுங்கால் மேற்கண்ட ஸஒக்தத்தைக்கொண்டு வேதஸ் எனப்பெறும் பத்தாயிரம் ஆத்து நொச்சி ஸமித்துக்களால் செய்ய வேண்டும், என்றும் விரிவு பேசப்பெற்றுள்ளது.

இதே போல 'வ்ருஷ்டிப்ரதவாருணீ ருக்விதானம்' என்று வேறு ஒரு கல்பமும் இம்மறையுள் அறிவிக்கப்பெற்றுள்ளது.

ஆக வேதஸ் என்னும் ஆத்து நொச்சி ஸமித்துக்களைக் கொண்டு செய்யப்பெறும் ஹோமத்தால் மிகு மழை பொழியும் என்பது தெளிவாகிறது.

யஜுர் வேதத்துள் ....

யஜுர் வேதத்துள்ளும் மழை பெறுவதற்கு ஜெப ஹோமங்கள் கூறப்பெற்றுள்ளன. 'மாருதமணி' என்ற நான்கு அனுவாகம் – பிரிவுகள் – அறிவிக்கும் ஜெப ஹோமங்களைச் செய்ய மழை பொழியும் என்பது உறுதி.

மல்குக வேத வேள்வி :

மனுஸ்மிருதியுள் 'அக்நௌ ப்ராஸ்தாஹுதி:' என்னும் ஸ்லோகத்தில் அக்னியில் செய்யப்பெறும் ஹோமம் சூரியனிடம் சேர்ந்து அதனால் மேகம் உண்டாகி மழை பொழிகிறது. எனக் கூறப்பெற்றுள்ளது.

"யக்ஞாத் பவதி பர்ஜந்ய:" என்ற கீதை உபநிஷத் வாக்கியமும் வேள்விகளால் மழை உண்டாகி உலகம் தழைப்பதை உரைக்கிறது.

மந்திர சாஸ்திரங்களில் உள்ள 'பிரபஞ்ச சாரம்' 'சாரதா திலகம்' முதலிய கிரந்தங்களில் 'அவரவர்கள் உபாசிக்கும் தெய்வங்கட்குரிய மந்திரங்களாலும் வேதஸ் எனப்பெறும் ஆத்து நொச்சி சமித்தைக் கொண்டு ஹோமம் செய்ய மழை பொழியும்' என்று கூறப்பெற்றுள்ளது. உதாரணமாக ஸ்ரீ மகாகணபதி மந்திரத்தை ஜெபிப்பவர்கள்.

"ஸ்வர்ணப்த்யை மதுநா .... மந்த்ரபுன: வேதஸை:"

ஹோமத்தில் ஒவ்வொரு திரவியத்திற்கும் பலன் சொல்லும் போது வேதஸ் ஸமித்துக்கு மழை பலனைச் சொல்லப்படுகிறது.

கடந்த ஓராண்டுக் காலமாக மேகம் பொய்த்தமையால் நாட்டில் வறட்சி நிலைமை தோன்றியுள்ளது. பசி, பட்டினி, பஞ்சம் முதலிய கொடுமைகள் விரிவடைகின்றன. இப்பஞ்ச நிலைமை அதிகமானல் பக்தி உணர்வு மங்கக்கூடும்; பண்பாடு பற்றிய நம்பிக்கை குறைவடையலாம், ஒழுக்கம் மங்கக்கூடும்; கொலை களவு முதலிய தீமைகள் பலிவடையலாம்; பசிக்கொடுமை எதையும் செய்யத் தூண்டும் தானே?

எனவே ஒழுக்கம், பண்பாடு, அறங்கள், கலை, கலாசாரம் பெருகி பன்னுயிர் தழைத்து பாநிலம் வாழ ஆத்திக நல்லன்பர்கள் பாலில் நனைத்த ஆத்து நொச்சி ஸமித்துக்களைக்கொண்டு, ருக் வேதத்தில் கூறப்பெற்றுள்ளபடி 'த்ருவாஸஷ்த்வா' என்ற நாற்பத்தரண்டு அட்சரங்களைக் கொண்ட மந்திரத்தை ஜெபித்து ஹோமம் செய்கலையாவது, அல்லது யஜுர்வேதத்தில் 'மாருதபணி' என்கிற நான்கு அநுவாகங்களில் கூறப்பெற்றுள்ளபடி ஜெப ஹோமங்கள் செய்தலையாவது அல்லது இஷ்ட தேவதைகளுக்குரிய மந்திரங்களைக் கொண்டு வேதஸ் ஸமித்துக்

களால் ஜெப ஹோமங்களைச் செய்தலையாவது மேற்கொண்டு மழை வளம் சுரக்க முயல வேண்டும்.

இக்காரியங்கள் தனியொரு மனிதரால் முடிக்கக் கூடியவையல்ல; பாரில் ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகும் ஊர்கள் தோறும் உள்ள செல்வந்தர்களின் உதவியுடன் ஆத்திக அன்பர்கள் திரண்டு மேற்கூறிய ஜெப ஹோமங்களைச் செய்யப் பலன் பெறுதல் உறுதியாகும். நிதிமிகுந்தவர், சமய நிறுவனங்களின் தலைவர்கள், ஆத்திக சங்கங்கள், – இந்நல் முயற்சியில் விரைந்து ஈடுபாடுறச் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன்
கோல்முறை அரசு செய்க; குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்."

— கந்தபுராணம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Thirubuvanam.

Lord Sarabeswara was Divine Hoary tradition for His Origion. Lord's incarnation was many facts and reasons. But the most important out come of His incarnation on earth is for the establishment of peace which is very much desired in the universal even to day.

I am thankful for his Holiness the A/C & other Officer for having endeavour to take a convenient Darsan of Lord. I am indeed fortunate that I was a spritual reciling of Thirupanandal Swamiji with all members of my family.

(s-d) T. RAMAPRASAD RAO,
Judge.

25—5—75.

"ஆட்கொள்ளும் வித்தகர்"

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

(மலர் 34, இதழ் 6, பக்கம் 261 இன் தொடர்ச்சி)

(9) உலகத்தில் தலைவர்கள் தங்களுக்குப் பலதிறப் பணி விடைகளைச் செய்வதற்கென்றே ஏவலர் பலரை அமர்த்திக் கொள்வது வழக்கம். ஆனால் இறைவனோ தன் தொண்டர்களைச் "சும்மா இரு" எனச் சொல்வது மட்டும் அன்றி, அவர்களுக்குத் தானே வலிந்து வந்து பல திறப்பணிகளைச் செய்து மகிழ்கின்றான். கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூதுபோனான்; பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து பணியாற்றினான்! சிவபிரான் சுந்தரர் பொருட்டுப் பிச்சை எடுத்துழன்றதும், பரவையார்பால் தூது சென்றதும் பாணபத்திரர்க்காக விறகு சுமந்ததும், வந்தியம்மைக்குக் கூலியாளாய் வந்து மண் சுமந்து பிரம்படிபட்டுப் புண் சுமந்ததும் போன்ற வரலாறுகள் இங்கு எண்ணி இன்புறத்தக்கன.

(10) எசமானர்களின் மூட்டை முடிச்சுக்கள் ஆகிய பாரங்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு உடன் செல்லுதல், உலகத்து வேலைக்காரர்களுக்குரிய இயல்பு. ஆனால் இறைவனோ "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுடைய பாரத்தைச் சுமந்துகொண்டு உங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றேன்" என்று, தன் அடியவர்களின் பாரங்கள் பலவற்றையும் தானே வலிந்துவந்து ஈர்த்து ஏற்றுச் சுமந்து கொள்கின்றான். 'தமக்கு அன்புபட்டவர் பாரமும் பூண்பர், ஆரூர் அரநெறியாரே" என்பர் திருநாவுக்கரசர். சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவராகிய உமாபதி சிவமும், இறைவனுக்கு "எடுத்துச் சுமப்பான்" (Porter) என்னும் ஒரு பெயரைப் புதிது படைத்துத் தமது திருவருட்பயன் என்னும் நூலில் வழங்கியிருத்தல் காணலாம். "செம்மலர் நோன்தாள்" 'மதனுடை நோன்தாள்' என்னும் ஆன்றோர் அருந்தொடர்களும், இவ்வுண்மையினை வலியுறுத்தும்.

(11) ஒரு சில எசமானர்கள், தம் கீழ்ப் பணியாற்றும் வேலைக்காரர்கள் செய்யும் செயல்களில், எப்போதும் குற்றம் குறைகளையே கண்டுபிடித்துச் சுட்டிக் காட்டிச் சீறிச் சினந்து வைது பழிப்பர். கடுந்தண்டனைகளும் கொடுப்பர். ஒரு சிலர், பணியாட்கள் நல்லதே செய்தாலும் கூட, குற்றமாகவே பிறழ உணர்ந்து வெகுள்வர். இறைவனே தன் அடியவர்களின் குற்றங் குறைகளைக் குறிக்கொண்டு நோக்கமாட்டான். கண்டும் காணாததுபோற் பெருந்தன்மையாக இருந்துவிடுவான். அடியவர்கள் செய்யும் பிழைகளுக்காக அவர்களுக்குத் தீங்கு எதுவும் செய்யமாட்டான். அன்பர்கள் செய்யும் பிழைகளை மறப்பதிலும், மன்னித்துப் பொறுமை காட்டுவதிலும், இறைவனுக்கு இணையாவார் இலர். "குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என்பது சப்பந்தர் தேவாரம். "பின்னை என் பிழையைப் பொறுப்பான், பிழைஎலாம் தவிரப் பணிப்பான்" என்பது சுந்தரர் திருப்பாடல். "பேயேனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையன்' என்பது திருவாசகம். "ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கித் தீது புரியாத தெய்வம்" என்றும், "போரிப பிரான் எம் பிழை பொறுத்தால் என்ன யார் இப்படி பொறுப்பார்?" என்றும் வியந்து வினவித் துதிப்பர் சிதம்பர சுவாமிகள்.

(12) ஊழியர்பாற் குற்றங் கண்டால் கடிந்து தடிவது, எசமானர்களின் இயல்பு. தமது ஊழியர்கள் தவறு செய்யின், உலகத்து எசமானர்களுள், தலையாயினர் பிழையை உட்கொண்டு அமைதலும், இடையாயினர் அவரைத்துறத்தலும், கடையாயினர் அவரைக் கெடுத்தலும் செய்யக் காண்கின்றோம். (கோவையார், 25.) இம்மூவகையும் செய்யாது இரங்கிக் காத்தருள்பவன் இறைவன்.

உலகத்துத் தலைவர்களின் மனமும் முகமும் அவ்வப்போது மாறிக்கொண்டேயிருக்கும்; அவர்கள் காட்டும் அன்பு எப்போதும் ஒரே நிலையில் இராது. "காலையில் ஒன்றுவர்; நடும்பகலில் ஒன்றுவர்; மாலையில் ஒன்றுவர் மனிதரெல்லாம்" என்று ஒரு தனிப்பாடல் கூறுவதுபோல, அடிக்கடி உலகியல் தலைவர்களின் மனமும் குணமும் மாறி மாறி வேறுபட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் அருளியல் தலைவனாகிய இறைவனே அத்தகையவன் அல்லன். அவன் எனறும் மாறாத நிலைபேறான இயல்புகள் உடையவன். தன் அடியவர்களிடம் அவன் எப்போதும் இனியவனாகவே விளங்குவான். இதனை நமது திருநாவுக்கரசர்

"எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே" என்று தமது கச்சித் திருவேகம்பம் பற்றிய தேவாரப் பாடலிற் குறித் திருத்தல் காணலாம்.

முடிவுரை :

இங்ஙனம், இன்னும் எத்தனையோ பலவகைகளில் எண்ணி யுணர்ந்து இன்புறுதற்கேற்ற நிலையில், 'ஆட்கொள்ளும் வித்தகர்' என்னும் அழகிய இனிய அரிய தொடர், அமைந்திருக்கின்றது. இத்தகைய எத்தனையோ பற்பல அரும்பெருந் தொடர்கள், திருவாசகத்தின்கண் ஏராளமாகப் பயின்றுவரக்காண்கின்றோம். அவற்றினையெல்லாம் ஓதியுணர்ந்தும், நீள நினைந்து ஆழ்ந் தறிந்தும் மகிழ்தல், நம்மனோர் இறையருள் நெறியில் தலைப்பட்டு உய்தி பெறுதற்குப் பெரிதும் துணைபுரியும் என்பது திண்ணம்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

A well Maintained Temple.

(s-d) P. SANKARAN,
Member,
Tamilnadu Public Service Commission.

6—5—75.

* * * *

The Temple is very clear and well Maintained.

(s-d.) N. Kannappan,
Chairman,
Arulmigu Meenashi Sundareswarar Temple,
Madurai.

19—5—75.

* * * *

Had the privilege of dharshan of the temple. Which is well Maintained.

(s-d.) T. C. RENGA DURAI,
Collector, Pondicherry.

20—5—75.

சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

(மலர் 34. இதழ் 5. பக்கம் 206 இன் தொடர்ச்சி)

2, பௌத்தரில் சௌத்திராந்திகன் மதம்

இனிப் புறப்புறச் சமயங்களில் உலகாயதத்தை அடுத்து நிற்கும் பௌத்த மதத்தின் கொள்கைகளையும், அவற்றிற்கு மறுப்பும் கூறுவான் எடுத்துக் கொண்டு அம்மதத்தின் நான்கு வகைகளுள் முதற்கண் சௌத்திராந்திக மதத்தின் கொள்கைகளை அம்மதத்தவர் கூறுமாறே முப்பத்தொரு செய்யுளால் கூறிக் காட்டுகின்றார்.

'பௌத்த மதத்தின் முதலாசிரியர் ஆதி புத்தர்' என்பதும், 'அவருக்கு மாணாக்கர் ஆயினர் நால்வர் முதலாசிரியரது கருத்தைத் தாம் தாம் அறிந்தவாறு பரப்பினமையின், பௌத்த மதம் நான்கு வகையினது ஆயிற்று' என்பதும் பௌத்த சமய மரபு. மாணாக்கர் நால்வராவார் 'சௌத்திராந்திகர், யோகாசாரர், மாத்தியமிகர், வைபாடிகர்' என்போர். இவருள் சௌத்திராந்திகரது மதமே முதன்மையானது. அதனால், 'பௌத்த மதம்' என்றாலே சௌத்திராந்திக மதந்தான் கொள்ளப்படுகின்றது. பிற மதங்கள் இதனினின்றும் சிறிது சிறிதே வேறுபடுகின்றன. அதனால் இச் சௌத்திராந்திக மதத்தையே ஆசிரியர் முதற்கண் எடுத்தோதி மறுக்கின்றார். 'சௌத்திராந்திகர்' என்பது, 'புத்த சமயக் கோட்பாடுகள் எத்துணைச் சூத்திரங்களில் முடிவுறும்' என்று ஆசிரியரை வினவிய காரணத்தால்வந்த பெயர். சௌத்திராந்திகர் - சூத்திராந்தம் கடாவியவர்.

நீதிஆர் வேத நூலின்
    நெறியலா அறங்கள் நாளும்
ஓதிஓ ஐந்து சீலம்
    உடையராய் உடலம் மூடிப்

போதிநீள் மரத்தின் மேவும்
புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதான் இலாத கொள்கைச்
சௌத்திராந் திகன்முன் சாற்றும். 64

இதன் தெளிபொருள்

எல்லா நீதிகளும் நிரம்பியுள்ள வேதமாகிய உயர்ந்த நூலை இகழ்ந்துவிட்டு, அதற்கு மாறானவற்றை 'அறங்கள்' என்று எப்பொழுதும் சொல்லி, 'பஞ்ச சீலம்' என்னும் ஆசாரத்தைக் கொண்டவர்களாய், [மருதந் துவர் தோய்ந்த ஆடையை] மேலே போர்த்துக்கொண்டு, நீண்ட அரசமரத்தின் நிழலில் விருப்பத்துடன் இருக்கின்ற நால்வகைப் புத்த மதத்தவர்களில் 'சௌத்திராந்திகன்' என்னும் புத்த மதத்தவன் முதற்கண் தனது கொள்கையை ['இஃதே உண்மை' என்று] விளக்கிச் சொல்லுகின்றான்.

விளக்கம்

பஞ்ச சீலங்களாவன:- கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை விழையாமை, கள்ளுண்ணாமை அல்லது இரவாமை என்பன. 'இவை எல்லார்க்கும் உரியன' எனவும், 'இவற்றோடு, ஆசனம் வேண்டாமை, சந்தனம் மாலை முதலியவை அணியாமை, பொன்னையும் வெள்ளியையும் தீண்டாமை, ஆடல் பாடல்களை விரும்பாமை, இரவில் உண்ணாமை என்ற ஐந்தும் கூடத் தச சீலங்களைத் துறவிகள் மேற்கொள்ளவேண்டும்' எனவும் கூறுவர் பஞ்ச சீலங்களில் துறவிகட்கு, 'பிறன்மனை விழையாமை' என்பதற்கு ஈடாக, 'புணர்ச்சி விழையாமை' என்பதைக் கொள்ளல் வேண்டும் என்பதும் அவர்கள் கூற்று.

'அரச மரம் ஞானத்தைத் தருவது' என்னும் கருத்தால், அதனை 'போதி விருட்சம்' என்றல் புத்த சமய மரபு. போதம் - ஞானம். போதி - ஞானத்தைத் தருவது. 'ஆதி புத்தர் அரச மர நிழலில்தான் ஞானம் பெற்றார்' என்பதும் அம்மதத்தின் வரலாறு. "வைத்து" என்பது கட்டுரை அசை. சாதி – மரபு; ஆன்றோர் ஒழுக்கம். "சாதிதான் இலாத கொள்கை" என்றது, 'சனாதனம் அல்லாத நவீன மதம்' என்றபடி. (1

முழுதுணர்ந் துலகில் கோறல்
முதற்செயல் முனிந்து. மற்றும்
பழுதிலா அருளி னாலே
பரதுக்க துக்க னாகித்
தொழுதுவா னவரும் போற்றத்
தொல்பிட கங்க ளான
வழுவில்ஆ கமங்கள் சொன்ன
மாதவன் நாதன் ஆவான். 65

இதன் தெளிபொருள்

எல்லாவற்றையும் எஞ்சாமல் உணர்ந்து, இவ்வுலகில் கொலை முதலிய தீயவற்றை அறவே ஒழித்து, மற்றும் குற்றம் அற்ற அருள் காரணமாகப் பிறர் துன்பத்திற்குத் தான் துன்புறுகின்றவனும், தேவர்களும் போற்றிக் கொள்ளும்படி, 'ஆதி பிடகங்கள்' எனப்படுகின்ற குற்றம் அற்ற முதல் நூல்களை உலகிற்கு அருளிச்செய்த பெருஞானி எங்கள் இறைவன்.

விளக்கம்

இங்கு இவ்வாறு கூறப்பட்டவன் 'ஆதி புத்தன்' என்பது பௌத்த மதத்தவர் கருத்து. பர துக்கம் - பிறர்க்கு உளதாகின்ற துன்பம். 'அதற்குத்தான் துன்புறுகின்ற அருளாளன்' என்று கூறுவாராய், 'பர துக்க துக்கன்' என்பதைப் புத்தனுக்கு உரிய ஒரு சிறப்புப் பெயராக அம்மதத்தவர் கூறுவர். பௌத்தர்கள் தம் முதலாசிரியன் செய்ததாகச் சொல்லும் முதல் நூலை, 'பிடகம்' என்னும் பெயரால் கூறுவர். "தவம்" என்றது இங்கு தவத்தோடு அதன் பயனாகிய ஞானத்தையும் குறித்துநின்றது. 'புத்தன்' என்பதற்கு 'ஞானி' என்பதே பொருள். நாதன் - இறைவன். புத்தர் முதலியோர், 'இறைவன்' என்றல், சமயத் தலைவரையே; கடவுளையன்று

அக்காலத்தில் சமய வாதம் செய்வோர், 'இறைவன் இவன், இறைவனால் இயம்பப்பட்ட நூல் இது. அதன் பொருள்கள் இவை, அவற்றின்படி கட்டாவது இது. வீடாவது இது' என்று இம்முறையால் வாதித்தல் வழக்கம் என்பது மணிமேகலைக் காப்பியத்துள் வரும் சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதையால் அறியலாம். அம்முறையில் சௌத்திராந்திகன் தங்கள் இறைவன் இவன் என்பதும், அவனால் இயம்பப்பட்ட நூல் இது என்பதும் கூறுமாறு இச்செய்யுளால் கூறப்பட்டது. (2)

மருவிய அளவை காட்சி
மானமென் றிரண் டிவற்றால்
கருதிய பொருள்கள் ஞான
ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வரும்; உரு, அருவம், வீடு,
வழக்கென நான்க தாகித்
தரும்; அவை ஒன்றி ரண்டாய்த்
தான்விரிந் தெட்டின் ஆமே. 66

இதன் தெளிபொருள்

பொருள் இயல்புகளை உள்ளவாறு உணர்தற்குப் பொருந்திய அளவைகள், காட்சியும், அநுமானமும் என இரண்டு. இவற்றால் அளந்தறியப்படும் பொருள்கள் யாவும், ஞானம், ஞேயம் என இரண்டாய் அடங்கிக் கணந்தோறும் (நொடிதோறும்) தோன்றியழியும். அங்ஙனம் ஆகின்ற பொருள்கள், உருவம், அருவம், விடு வழக்கு என நான்கு வகையினவாய்ப் பயன் தரும். இனி, உருவம் முதலிய அந்நான்கும் தனித்தனி இரண்டாய், எட்டாய் விரியும்.

விளக்கம்

மூவகை அளவைகளில் உரையளவையை (ஆகமப் பிரமாணத்தை)ப் பௌத்தர் வேறு அளவையாகக் கொள்ளாமல், அனுமானத்திலே அடக்கி, 'அளவை இரண்டே' எனக் கொள்வர். ஞாதிரு ஞானம், ஞேயம் (காண்பான், காட்சி, காட்சிப் பொருள்) என்ற மூன்றில் ஞாதுருவை (காண்பவனை ஒரு தனிப் பொருளாக அவர்கள் கொள்வதில்லை. எல்லாப் பொருளும் ஒரு கணத்தில் (நொடியில்) தோன்றி, மறு கணத்தில் அழியும், யாதொரு பொருளும் மூன்றாவது கணத்தில் இருப்பதில்லை என்பது பௌத்த மதக் கொள்கை. இது பற்றி இக்கொள்கை 'கணபங்க வாதம்' எனப்படுகின்றது. இவை முதலியன இச்செய்யுளால் விளங்குதல் காண்க. (3)

உருஇயல் பூத மோடங்
குபாதாய ரூப மாகும்;
அருஇயல் சித்தம் கன்மம
என்றிரண் டாகும்; வீட்டின்

மருவியல் குற்றம் கந்தம்
எனவழங் கிடும்வ ழக்கின்
இருவியல் உள்ள தோடங்
கில்லதாம் இயம்புங் காலே. 67

இதன் தெளிபொருள்

உருவம் முதலாகச் சொல்லப்பட்ட நான்கனுள் உருவம் 'பூதம்' என்றும், 'உபாதாயம்' என்றும் இரண்டாய் நிற்கும். அருவம் 'சித்தம்' என்று 'கன்மம்' என்றும் இரண்டாய் நிற்கும். வீடு (விடுதலை) குற்றவீடு என்றும், 'கந்தவீடு' என்றும் இரண்டாய் நிற்கும். வழக்கு 'உள் வழக்கு' என்றும், 'இல் வழக்கு' என்றும் இரண்டாய் நிற்கும். இவையே மேல், "ஒன்று இரண்டாய்த் தான் விரிந்து எட்டின் ஆம்" என்றவாறு ஆகின்ற முறைமை.

விளக்கம்

வேதமதங்கள் 'உபாதானம்' எனக் கூறுவதைப் பௌத்தர் 'உபாதாயம்' என்பர். இரண்டிற்கும் 'முதற்காரணம்' என்பதே பொருள். எனினும், முதற்காரணமாய் நிற்கும் பொருளை, 'பூதம்' என்றும், அதன் தன்மையை 'உபாதாயம்' என்றும் பௌத்தர் சிறிது வேறுபடுத்தி வழங்குவர். 'உபாதானம்' என்றே ஓதும் பாடமும் இங்குக் காணப்படுகின்றது.

மண்புனல் அனல்கால் பூதம்;
வலிகந்தம் இரதம் வன்னம்
எண்தரும் உபாதா யம்தான்;
இவைஇரு நான்குங் கூடி
உண்டொரு பொருள்உ ருபம்;
உறுபுலன் உபாங்க மோடாக்
கண்டது சிததம்; கன்மம்
நன்றுதீ தென்றல் காணே. 68

இதன் தெளிபொருள்

உருவத்தின் வகை இரண்டனுள் பூதம் மண், நீர், தீ காற்று, என நான்காகும். உபாதாயம் முறையே அவற்றின்கண் உள்ள நாற்றம், சுவை, நிறம், ஊறு என்பவையாம். இவை எட்டின் கூட்டத்தாலே உருவப் பொருள்கள் யாவும் அமையும்.

அருவத்தின் வகை இரண்டனுள் சித்தம், புலன் உபாங்கம் என இரண்டாகும். கருமம், நல்லது தீயது என இரண்டாகும்.

விளக்கம்

"வலி" என்றது பிறபொருளைத் தாக்கி நிற்கும் தன்மையை. அத்தன்மையானே காற்றினது இருப்பு உணரப்படுகின்றது. ஆகவே, அஃது ஊறு (பரிசம்) ஆதல் உணர்க இறுதியில் நிற்கற்பாலதாய இது. செய்யுள் நோக்கி முன் நின்றது. புலன் சத்தம், பரிசம் முதலியவை உபாங்கம் அவற்றைத் தரும் பொருள்கள். இவ்விரு திறத்தையும் சிந்திப்பதே சித்தம் என்க. 'ஆகாயம்' என்பது ஒன்று சொல்லப்பட்டாலும் அஃது இவ் வழக்கேயன்றி, உள்வழக்கன்று என்பது பௌத்த மதம். திருவள்ளுவர் "பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" * என்று கண் முதலியவற்றோடு ஒப்ப ஆகாயத்தையும் உள்பொருளாகக் கூறியிருக்கவும் அவரை மணிமேகலை ஆசிரியர் பௌத்தராகக் கருதியது வியப்பாகின்றது, (5)

---

* குறள் – 271.

(தொடரும்)

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	ரூ.	6—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	ரூ.	7—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	ரூ.	10—00
ஆயுள் சந்தா	ரூ	100—00

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609001.
தஞ்சை மாவட்டம்.

கடிதம்

சோ. கிருஷ்ணன், திருச்சி – 5
2—6—75

தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னூர் திருவடிகளுக்கு அடியேனது பணிவார்ந்த வணக்கங்கள்.

தருமையில் மூன்று நாட்கள் மிக இனிமையாகக் கழிந்தன. என்னை மறந்து இறைவன் தன்னையே நினைக்க நல்ல வாய்ப்பாக அமைந்திருந்தது. குருலிங்க சங்கமமாகிய மூத்திற வழிபாடு களும் ஆங்கு முறையாக நிகழக்கண்டு பெருமகிழ்ச்சி யடைந் தேன். அத்துடன் கஜ பூசையும், கோ பூசையும் நாள்தோறும் நிகழ்வது போற்றுதற்குரியன.

சொக்கலிங்கப் பெருமான் கோயில் கொண்டு விளங்கும் பூசைமடம் மிக அருமையாக அருட்பொலிவோடு காட்சி தரு கின்றது வழிபாட்டின்போது ஓதுவார்கள் மிக இனிமையாகத் திருமுறைகளை ஓதுகின்றனர். அவை உள்ளத்தைத் தொட்டன. குருமூர்த்தக் கோயில்கள் அனைத்தும் அழகாகவும், தூய்மை யாகவும் விளங்குகின்றன. குருபூசையன்று ஒவ்வொரு சந்நிதி யிலும் அம்மூர்த்தங்களின் அருள் வரலாறுகள் கூறப்பெற்றன. இது நல்ல ஏற்பாடு

பூசைமடத்தில்நடைபெற்ற மாகேஸ்வரபூசை மெய்சிலிர்க்கச் செய்தது. குருமகாசந்நிதானம் அவர்களே முன்னின்று இப் பூசையை நடத்தச்செய்வதும், அதன் பின்னரே நைவேத்யம் கொள்வதும் அரிய செயலெனக் கருதுகிறேன்.

சடைமகுடம் விளங்க, திருவேடங்கள் தாங்கி சிவபெருமானே எனத்திகழ்ந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவீதி யில் உலாவந்த காட்சி உண்மையில் மிக அற்புதமாக இருந்தது. அக்காட்சி கண்டு ஆனந்த பரவசமுற்றேன். கண்கள் ஆனந்த வெள்ளம் பொழிந்தன. கண் பெற்ற பயனை அன்று முழுவதும் அடைந்தேன். உலாப் பிரபந்தம் பாடவேண்டுமென்ற ஆசை. ஆனல் அதற்கு நான் ஒரு புலவனுக இல்லையே என்ற ஏக்கம் அன்று ஏற்பட்டது.

அன்பு மறவாத தொண்டன்,

சொ. கிருஷ்ணன்.

— இலங்கை —
மாதோட்டத் திருக்கேதீச்சரம்

திருமுறைக் கலைஞர்

வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

(மலர் 34. இதழ் 6. பக்கம் 256 - இன் தொடர்ச்சி)

மாதோட்டத் தலம், மூர்த்தி இவற்றின் சிறப்பு :

முற்காலத்தில் நீர்வளம், நிலவளம், செல்வவளம் முதலிய பல வளங்களுடன் பாலாவி நதியின் வளமும் கூடி மாதோட்ட நகரும் திருக்கேதீச்சரத் திருக்கோயிலும் சிறப்புற்று விளங்கின.

இந்நிகழ்ச்சியின் வரலாறு திருவாசகம் குயிற்பத்து 2 ஆவது பாட்டு " ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேயபிரானை " எனவும், திருவார்த்தை 5 ஆவது பாட்டு " ...எங்கள் பரமன் பெருந்துறை ஆதி அந்நாள், உந்து திரைக்கடலைக்கடந்து அன்று ஓங்கு மதிலிலங்கை அதனில் பந்தணை மெல்விரலாட்கு அருளும் பரிசு " எனவும் கூறப்பெற்றுள்ளது.

இங்குவரும் 'பெருந்துறை' என்ற பெயர் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதைச் சில ஆராய்ச்சியாளர் திருக்கேதீச்சரத்தைக் குறிப்பது என்கின்றனர். இங்குக்கூறிய பெருந்துறை – திருப்பெருந்துறை என்ற தலம், பாண்டிநாட்டிலுள்ள திருப்பெருந்துறைத் தலத்தையே குறித்து நிற்பதாகும். திருக்கேதீச்சரத் தல புராணத்தில் சிவபெருமான் மண்டோதரிக்கு அருள் புரிந்த வரலாறு ஒன்றும் பேசப்படவில்லை.

" வாழையம் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்ட..........கேதீச்சரம் " எனவும், " மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்..........கேதீச்சரம் " எனவும் வருவன சம்பந்தர் தேவாரம்.

" மாவின்கனி தூங்கும் பொழில் மா தோட்ட நன்னகரில்...... பாலாவியின் கரைமேல்...... திருக்கேதீச்சரத்தானே " எனவும் " வரியசிறை வண்டின்யாழ் செயும்மா தோட்ட நன்னகருள் பாலாவியின் கரைமேல்......... திருக்கேதீச்சரத்தானே " எனவும் வருவன சுந்தரர் தேவாரம்.

' திருவாரூர் பிறக்க முத்தி' என்பதுபோல இம்மாதோட்டத் திருக்கேதீச்சரத்தில் பிறந்த மக்கட்கும் பிறவுயிர்கட்கும் முத்திப் பேறு கிட்டுவது திண்ணம். இத்தலம் காசி (வாரணசி) யினைப்போலச் சிறப்புடையது. இங்கு மரணம் அடையும் உயிர்கள் அச்சமயம் கேதுநாதன் மகிமையால் அவன் சிவாலயத்தின் பாகமாகத் தலைவைத்துக் கிடக்குமாம். இத்தலத்தில் ஒருவர் மரணம் அடையும் தருவாயில் திருக்கேதீச்சரன் அவரைத் தம் மடிமீது வைத்து அவரது வலக் காதிலே ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி, அவர்க்குச் சிவகதியினை அருளுவர் எனத் தல புராணம் கூறுகிறது.

இத்தலத்தில் சிவபெருமான் எக்காலத்தும் பிரியாதிருந்து ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றார். '......மாதோட்டக் கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர் கேதீச்சரம் பிரியாரே " என்பது சம்பந்தர் தேவாரம்.

திருக்கேதீச்சரத் தலத்தை அடைந்து சிலநாள் இருந்து திருக்கேதுநாதனை வழிபட்டவர்களின்கொடுவினைகள் அவர்களை அடைவதும் இல்லை; துன்புறுத்துவதும் இல்லை; " கேடிலா கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே" என்பது சம்பந்தர் தேவாரம்.

திருக்கேதுநாதன் எழுந்தருளிய திருக்கோயிலைச் சூழ்ந்த சிவமே நிலவும் மாடவீதியில் திருவைந்தெழுத்தை மனத்தில் செபித்துக்கொண்டு அங்கப்பிரதட்சணம் செய்பவர்களின் உடலுறு பிணியைப் போக்குவதுடன் பிறவிப் பிணியையும் கேதுநாதன் போக்குவர்.

இத்தலத்தைத் தரிசித்துப் பாலாவி நதியில் மூழ்கி இறைவனை வழிபட்டவர்களின் அடியினைத் தொழுது வணங்கி அவர்க்குத் தொண்டு செய்பவர் நாம் எல்லாம் வணங்கும் தெய்வம் ஆவர் என நூல் கூறும்.

ஆதி திருக்கேதீச்சரச் சிவலிங்கப்பெருமான் – தென்கயிலாய லிங்கப்பெருமான் திருக்கேதாரலிங்கம்போலச் சுயம்புலிங்கமூர்த்தி

ஆவர் இப்பெருமான் கேதுநாதன், கேதீச்சரநாதன், கௌரி நாதன், நித்தியமணவாளன் எனப் பல திருநாமம் பெறுவர்.

இக்கேதுநாதன் கௌரியம்மையாருடன் நித்திய மணவாள ராகக் காட்சி அளிக்கின்றார். இதனை, "மத்தயானை போர்த்த மணவாளா!" என்று சுந்தரர் தேவாரம் புகழ்கிறது.

திருக்கேதீச்சர மூர்த்தியைத் திருமால், பிரமன், தேவேந்திரன் முதலிய தேவர்கள், கேதுபகவான், மகாதுவட்டா, பிருகு, அகத்தியர், இராவணன், மாலியவான், மயன், மண்டோதரி, தசரத ஸ்ரீராமன், அருச்சுனன் முதலியோர்கள் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் இராமேச்சுவரக்கடற்கரையின் கண் நின்று தரிசித்துத் தேவாரத் திருப்பதிகம் பாடித் துதித்து வணங்கினர்.

மாதோட்டத்துப் பாலாவி நதியின் (தீர்த்தத்தின்) சிறப்பு

"மாதோட்டத்(து), அத்தர் மன்னுபா லாவியின் கரையிற் கேதீச்சரம் அடைமின்னே" என்பது சம்பந்தர்தேவாரம். இமயத்து மானசவாவிபோல, மாதோட்டப் பாலாவி தீர்த்தம் ‡ மிகச் சிறப்புடையது இத்தீர்த்தம் – நதி. இத்தலம் தோன்றியபோதே

‡ இப்பாலாவி தீர்த்தத்தை வெளிநாட்டுப் பேரறிஞரான தாலமி, பிளினி முதலியோர் "பாலாவி மண்டலம்" எனப் புகழ்கின்றனர். மன்று - இடம். மன்று என்பதை 'மூண்டு' எனக் கிரேக்கர் கூறுவர்; பின்பு மூண்டு மண்டு, மண்டலம் ஆயிற்று என்பர். உதகமண்டலம் (நீலகிரி) என்றபோது மண்டலம் இடத்தைக் குறித்தல்போலாம்.

இப்பாலாவி தீர்த்தம் கி. பி 9 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியான சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திலும் பெருநதியாக இருந்திருக்கக்கூடும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தற்போது விளங்கும் பாலாவி தீர்த்தம், கி. பி. 1948 ஆம் ஆண்டு முதலில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரின் பெருமுயற்சியால், மன்னார்ப்பகுதி நீர்ப்பாசன இஞ்சினீராக இருந்துவந்த திருவாளர். S. ஆறுமுகம் அவர்களால் கண்டுபிடிக்கப்பெற்று அதனை அணைகட்டித் தேக்கிய நீர்நிலையே ஆகும்.

தற்போது பாலாவி பெரும் குளம்போல் திகழ்கின்றது. முன்னர் பெருநதியாக ஓடி மேலைக் கடலில் கலந்ததாக வரலாறு கூறும்.

தோன்றியது. இது, திருக்கேதீச்சர ஆலயத்தின் தென்பால் சிறிது தூரத்தில் – மிக அண்மையில் உள்ளது. தற்போது அது கீழ்மேல் மிக நீண்டு அகன்று ஏரிபோன்ற நீர் நிலையினை உடையதாக உள்ளது; சிவதீர்த்தம் எனப் பெயர்பெறுவது. "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்ற அப்பர் தேவாரத்தின்படி பாலாவி தீர்த்தம் சிவபெருமான் திருவடியாய்த் திகழ்வது; இது மூழ்குவோரின் பவ வினைகளைப் போக்கும் வலிமையுடையது.

"பவவினைக் குறும்பு போக்கும் பாலாவி" எனவும், பரம்பரன் உருவாய் உற்ற பாலாவி எனவும் வருவன திருக்கேதீச்சரப் புராணம்.

ஒருவர் இச்சிவதீர்த்தத்தில் விசேட புண்ணியகாலங்களிலோ அல்லது தமது பிதுர் தினத்திலோ நீராடி எள்ளொடு தருப்பணம் செய்யின் இஷ்ட சித்திகளைப்பெறுவர்; பிதுர்க்கள் மகிழ்ந்து ஆசி கூறுவர். மூழ்குவோரின் கன்மங்கள் சூரியனைக்கண்ட பனி போல நீங்கும்.

ஒருவர் இப்பாலி தீர்த்தத்தில் ஒருநாளேனும் ஸ்நானம் செய்யாத அவரது மானுடப்பிறவி ஒரு பிறவி ஆகுமோ? ஆகாது எனத் தல புராணம் கூறும்.

(தொடரும்)

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாறாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சச ஆண்டு வைகாசித்திங்கள் 31ஆம் நாள் (14—6—75) சனிக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருவேட்களம் ஸ்ரீ நல்லநாயகி உடனுறை ஸ்ரீ பசுபதீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். "திருவேட்களத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வழங்கப் பெறுவதுடன் தலத் தேவாரத் திருப்பதிகப் பாராயணமும், விளக்கவுரையும் நிகழ்த்தப்பெறும். பக்தர்கள் வந்து வழிபட்டுப் பயன் பெறுவார்களாக.

செய்திகள்

தருமை ஆதீனத்தில்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானாம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 21—5—75 புதன்கிழமை முதல் மகோற்சவம் தொடங்கி நடைபெற்றது. 21—5—75 அன்று கொடியேற்றமும், 25—5—75 அன்று இடப வாகனக் காட்சியும், 27—5—75 அன்று திருக்கல்யாணக் காட்சியும் மின் விளக்குகளால் ஓப்பனை செய்யப்பெற்ற வெள்ளி ரதத்தில் வீதியுலாவும், புஷ்ப விமானக் காட்சியும் 29—5—75 அன்று திருத்தேர்த் திருவிழாவும் 30—5—75 அன்று திருமடாலயத்திற்கு எதிரிலுள்ள திருக்குளத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமான் தீர்த்தங்கொடுத்தருளலும், காவிரியில் பஞ்சமூர்த்திகள் தீர்த்தங் கொடுத்தருளலும், இரவு கொடியிறக்கமும் நடைபெற்றன. திருவிழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் சிறந்த நாதசுர இன்னிசை நிகழ்ச்சிகளும், தக்க பக்க வாத்தியங்களுடன் திருமுறை வாணர்களால் திருமுறைப் பாராயணமும், வேத சிவாகம பாராயணமும் நிகழ்ந்தன. மகோற்சவத்தை முன்னிட்டு சிறந்த வேலைப்பாட்டுடன் கூடிய மண்டப அமைப்பில் செய்யப் பெற்ற முகப்புக்கள் விழாப்பந்தலை அழகு செய்தன. மின்விளக்கு வேலைப்பாடுகள் அழகுக்கு அழகு செய்வனவாக இருந்தன. மகோற்சவ நாட்களில் ஆதீன மடாலய முகப்பில் உள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாடு சிறப்புற நிகழ்ந்தது.

குருபூஜை விழா

30—5—75 அன்று ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா. ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாத பெருமான் சந்நிதி மலர்களால் பந்தல் அமைத்து அழகு செய்யப் பெற்றிருந்தது. சிறந்த நாதசுர இன்னிசைகள் முழங்கின. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன காலை 10 மணி அளவில்

தீபாராதனைகள் நடைபெற்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் வழிப்பாட்டில் கலந்து கொண்டு வழிபட்டு திருவருட்பிரசாதமும் அருளாசியும் பெற்று மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை முன்னிட்டு ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஸ்ரீ ஞானபுரீசுவரப் பெருமானுக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ ஞானம்பிகை அம்பாளுக்கு நவசக்தியர்ச்சனையும் நிகழ்த்தப் பட்டன. மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும் மற்றும் பல வெளியூர்களிலிருந்தும் அன்பர்கள் பலர் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டு மகிழ்ந்தனர். வழிபாட்டின்போது ஆதீன ஓதுவாமூர்த்திகள் பண்ணிசையுடன் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்கு எழுந்தருளியிருந்து வழிபட்டு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கும் அன்பர்களுக்கும் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

பின்னர் அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயத்திற்கும் ஸ்ரீ தர்மபுரீசுவரசுவாமி ஆலயத்திற்கும் ஸ்ரீஞானபுரீசுவரர் திருக்கோயிலுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். நண்பகல் மாகேசுவர பூஜை சிறப்புற நிகழ்ந்தது.

குருமூர்த்த தரிசனம்

குருபூஜை விழாவன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் காலை 6 மணி அளவில் மேலக் குருமூர்த்தங்களுக்கும், மாலை 7 மணி அளவில் திருமஞ்சனவீதியில் உள்ள குருமூர்த்தங்களுக்கும் நாதசுர இன்னிசை எடுபிடிகள் வாணவேடிக்கைகள் முதலிவற்றுடன் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள் அன்று குருமூர்த்தங்களுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. குருமூர்த்த வழிபாட்டிற்குப் பின்னர், ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி திருக்கோயில்களில் வழிபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது அன்பர்களும், பெருமக்களும் பக்தர்களும் சென்று வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

மாலையில் குருமூர்த்ததரிசனத்திற்குப்பின்னர், ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்புவழிபாடு நிகழ்ந்தது. பாவனாபிஷேகமும்,

திருமெய்ஞ்ஞான நிவேதனமும், ஆராதனைகளும் சிறப்பாகச் செய்யப்பெற்றன. மெய்யன்பர்களும், பக்தர்களும் வழிபட்டு பிரசாதம் பெற்று உய்ந்தனர் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பக்தர்களுக்குக் கொலுக்காட்சி வழங்கியருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் கொலு வழிபாடு நிகழ்த்தினார்கள். வெளியூர்களிலிருந்தும் மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும் வந்த பெருமக்களும் ஆதீன அலுவலர்கள் முதலியவர்களும் வழிபட்டு, குருவருட்பிரசாதம் பெற்று அருளாசி பெற்றனர்.

சமயப் பயிற்சி வகுப்பு

தருமையாதீனம் குருபூஜை விழாவை முன்னிட்டு 21—5—75 முதல் 31—5—75 முடிய சமயப் பயிற்சி வகுப்பு சிறப்பாக நடத்தப் பெற்றது தமிழ்நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் புலவர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சைவ அன்பர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

21—5—75 காலை 11 மணியளவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கினார்கள்.

காலை மாலை இருவேளைகளிலும் நாடோறும் நான்கு மணி நேரம் நிகழ்ந்த சமயப் பயிற்சி வகுப்பிலும் இரவு நிகழ்ந்த மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு விரிவுரைகளைக் கேட்டு சமயப் பயிற்சி பெற்றனர் காலையில் நிகழ்ந்த சமயப் பயிற்சி வகுப்புக்களில் தருமையாதீனப் புலவர் மகாவித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் மெய்கண்டார் அருளிய "சிவஞானபோதம்" திருவதிகை மணிவாசகம் கடந்தார் அருளிச் செய்த "உண்மை விளக்கம்" ஆகிய இவ்விரு நூல்கள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள் சென்னை திருக்கோயில் ஆசிரியரும், தருமையாதீனப் புலவருமாகிய ந. ரா. முருகவேள் அவர்கள் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார் அருளிச் செய்த "திரு உந்தியார்" திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் அருளிச் செய்த "திருக்களிற்றுப்படியார்" ஆகிய இவ்விரு நூல்கள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மாலையில் வேதம், ஆகமம், பத்ததி, புராணம், இதிகாசம் ஆகியவை பற்றியும் மற்றும் சாத்திரங்கள், பன்னிருதிரு முறைகள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் நூல்கள் ஆகியவை பற்றியும் அறிஞர்கள் பலர் விரிவுரை நிகழ்த்தினார்கள். பயிற்சி யாளர்களுக்குத் தேர்வு முறையில் கட்டுரைகள் எழுதச் செய்து சான்றிதழ்கள் 31—5—75 மாலை வழங்கப்பெற்றன. பயிற்சியாளர் களுக்கு 21—5—75 முதல் 31—5—75 முடிய இலவசமாக உண்டி, உறையுள் முதலிய வசதிகள் செய்து தரப்பெற்றன.

பட்டணப்பிரவேசத் திருநாள்

31—5—75 சனிக்கிழமையன்று பட்டணபிரவேசத் திருநாள் நிகழ்ந்தது. அன்று தருமையாதீனம் ஆன்மார்த்த மூர்த்தி சொக்கநாத பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றனர் பின்னர் சொக்கநாத பெருமான் பூஜை மடத்தில் மாகேஸ்வர பூஜை சிறப்புற நிகழ்ந்தது. அன்று இரவு 10 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் பட்டணபிரவேசத்துக்கு எழுந் தருளினார்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் பக்தர் களும் அன்பர்களும் புடைசூழ நாதஸ்வர இன்னிசை, திருமுறை இன்னிசை முதலிய இன்னிசை முழக்கத்துடன் சிவிகையில் ஆரோகணித்து நான்கு வீதிகளிலும் வலமாக எழுந்தருளி அன்பர்களுக்கு அருட்காட்சி வழங்கினார்கள். வீதிகளெல்லாம் தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் அழகு செய்யப்பெற் றிருந்தன வீதிகளில் அவர வரும் தங்கள் தங்கள் வீடுகளைத் தோரணங்கள் வண்ணாக்காகிதங்கள் மின் விளக்குகள் ஆகிய வற்றால் ஒப்பனை செய்து பூர்ண கும்பம் முதலியன வைத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி வரவேற்று அருட் பிரசாதப் பெற்று மகிழ்ந்தனர் விடியற்காலை 3 மணி அளவில் கொலுவிற்றிருந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருட்பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள்.

ஆச்சாள்புரத்தில் திருக்கல்யாணப் பெருவிழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான ஆச்சாள்புரம் ஸ்ரீ திருவெண்ணீற்றுமையம்மை உடனுறை ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் சைவ சமயாசாரியர்களுள் முதலாமவராகிய திருஞானசம்பந்தசுவாமி கள் திருக்கல்யாணப் பெருவிழா 26—5—75 திங்கட்கிழமை

சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கு உபநயனமும், இரவு ஸ்ரீ தோத்திர பூர்ணம்பிகைக்கும் ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கும் திருக்கல்யாணமும், அடுத்து புஷ்ப பல்லக்கில் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. தொடர்ந்து, பேரின்பப் பேறளிக்கும் திருப்பதிகம் ஓதலும், சிவஜோதி தரிசனமும் நடைபெற்றன. பக்தர்கள் திரளாக வந்து வழிபட்டுப் பயன்பெற்றனர். மாலை 6 மணி அளவில் தேவார வகுப்பு ஆண்டுவிழா நடைபெற்றது. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு மு. சுந்தரேசம்பிள்ளை அவர்களால் "ஞானசம்பந்தரும் அற்புதங்களும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது. தேவார வகுப்பு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பெற்றன.

மதுரை, தருமையாதீனத் திருமடத்தில்

திருவிளையாடற்புராண விரிவுரை நிறைவு விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் உத்தரவுப்படி 14—4—75 முதல் 14—5—75 வரை கயப்பாக்கம், சித்தாந்தவித்தகர், திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்களால் திருவிளையாடற் புராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. 14—5—75 மாலை நிறைவு விழா திரு. அ. சண்முகசுந்தரம் பிள்ளை (ஓய்வு பெற்ற டிப்டி கலெக்டர்) தலைமையில் நடந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுரையைப் படித்தளித்து விரிவுரையாளருக்கு ஆதீனத்தின் சார்பில் புலவர், திரு. தா. குருசாமி தேசிகர் பட்டாடையைப் போர்த்தி பாராட்டிப் பேசினர். அடுத்து திரு. சு. கோவிந்தசாமி புலவர், திரு. முத்தையன் ஆகியோர்கள் பாராட்டிப் பேசினர்கள். திரு தி பா. சுப்பராமன் சார்பிலும், புராண விரிவுரை கேட்ட அன்பர்கள் சார்பிலும் விரிவுரையாளருக்கு மரியாதைகள் செய்யப்பெற்றன. வந்திருந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பெற்றது. புலவர். திரு. தா குருசாமி தேசிகர் நன்றி நவின்ற பின்பு மங்கல வாழ்த்தோடு கூட்டம் இனிது நிறைவுற்றது.

.தம் :

ட. பக்கிரிசாமிச் செட்டியார் எம்,ஏ.,பி.எட், திருத்துறைப்பூண்டி

8—5—75.

னைத்துலகம் தொழுதேத்தும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
வர்கள் பொன்னூர் திருவடிகட்குத் தங்கள் வை. பக்கிரிசாமி
னேககோடி வணக்கங்களுடன் மிகப்பணிந் தெழுதிக்கொண்டது.
ம்பர்திரு நட்சத்திர த்தன்று எங்கள் ஊர் ஓதுவாமூர்த்திகள் திருமிகு [ஆபதுத்தாரண
ய்யா அவர்களுக்குத் தாங்கள், தங்கள் திருக்கையால் பொன்னுடைபோர்த்தி
நளி பொற்பதக்கமும் 501 வெண்பொற் காசுகளும் அருளிய பெருங்கரு
டியவர்கள் யாவரும் மறக்க இயலாது. தமிழகம் முழுவதும்உள்ள [னேயை
னைத்துப் புலவர்களையும், தேவார இசைவாணர்களையும் பற்றி நன்கு
றிந்தருளி வரிசையாகப் பந்திகள் வழங்கியருளும் பாங்கு வேறு யாரும்
றியாத ஒன்றாகும். நல்லறிஞர் எந்தமூலையில் இருந்தாலும் தெரிந்தெடுத்து
வர்களுக்குச் சிறப்பு நல்கும் பெருமை தங்களுக்கே உரியதாகும்
டியேனுக்குத் தெரிந்தவரை, சைவத்தையும் திருமுறைகளையும் தமிழையும்
னைவரும் வியக்கும்வண்ணம் வளர்க்கும் பெருமை தங்கட்குமட்டுமே
மைந்ததாகும். வேறுஎவரும் எண்ணிப்பார்க்கக்கூட இயலாத
ளவிற்குச் சைவத்தையும் தமிழையும் திருமுறைகளையும் வளர்த்தருள்வது
நமைமிகு தருமைத்திரு மடமே என்பது உலகறிந்த செய்தியாகும்,
துவும் தங்கள் அருளாட்சிக் காலத்தில் மிகவும் சைவப் பணிகள் நடை [பெறுவது
னைவரும் அறிந்ததே. அடக்கமும் ஆன்றபுலமையும்மிக்க ஆபதுத்தாரண
ய்யாவிற்குத் தாங்கள், அவர்கள் மணிவிழா ஆண்டில் சிறப்புச் செய்து
நள்புரிந்தமைக்காக எங்கள் ஸ்ரீபவ அக்ஷயதீசுவரர் பெரியநாயகி
ம்மன் தெய்வீகப் பேரவை சார்பிலும், நிர்வாக அதிகாரி,
றங்காவலர்கள் சார்பிலும் மனம்மொழி மெய்களாலான நன்றி
றிதலை மிகப்பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
துநிற்க, நேற்று திருக்கோளிலிப் பெருங்கோயில் கொடியேற்றுவிழா
ற்புதமாக நடைபெற்றது. சிறியேன் தரிசித்து மகிழ்ந்தேன்.
னைத்துச் சிறப்புடன் தங்கள் அருளாசியால் திருவிழா இனிது நடை [பெறும்என்று
டியேன் அகமகிழ்ந்தேன். ஆட்சியாளர்கள் சிலமாதங்களுக்குமுன்
டியேனை ஆய்வர் பதவியிலிருந்து ஆசிரியனாக மாற்றியது மிகவும்
னுகூலமாக ஆயிற்று. சமயத் தொண்டு செய்ய அதிகவாய்ப்பு
ம்மையப்பன் திருவருளால் கிடைத்துள்ளது. என்றும் தங்கள்
நளாட்சி ஓங்க எம்பெருமான் இணையடிகளை
றுதினமும் இறைஞ்சுகிறேன்.

வை. பக்கிரிசாமிச் செட்டியார்.

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(ஸ்ரீ இராக்ஷஸஹு ஆனி மீ 1௳ முதல் 32௳ முடிய)

(15—6—75 முதல் 16—7—75 முடிய)

குரு செ		கே பு	சனி சு
ல	இராசி 8௳ மே செ 16௳ சிம் சூ 18௳ மிது பு		சூ
			ல சந்
	ரா		

	பு சனி		
கே செ குரு	அம்சம்		சந்
			ரா
	சு	ல / ரா	

ஸ்ரீ இராட்சஸ ஹு ஆனி மீ 1௳ பானுவாரம் மக நக்ஷத்திரம் தைதுலை கரணம் கூடியதினத்தில் சூரிய உதயம் முதல் 14 நாழிகை 38 விநாடிக்கு சிம்ம லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் உலக சுபிட்சத்தை முன்னிட்டு மிதுன ராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தருளுகிறார். அதன் பலன் உலகெங்கும் நல்ல மழையும் நன்செய் புன்செய் பயிர்கள் விருத்தியுமாகி சகல ஜீவ இரட்சகம் ஏற்படும். தேசங்களில் கல்வி சீர்திருத்தப் புரட்சியும், வித்தியோபாசன நிலைமையும் ஏற்பட்டு வித்தியார்த்திகள் வித்தியாதானம் பெறுவர். இராசாங்கத்தினரால் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான சீர்திருத்தங்களும் சமூகநல சீர்திருத்த சேவா முறைகளும் தீவிரமாகி பிரஜைகள் அமைதி வாழ்க்கையை அனுபவிப்பார்கள். அறநிலைய

ஸ்தாபனங்கள் நீதிமன்றங்களில் உள்ள இறைவன் தூதுவர்களாக விளங்குகின்ற நீதிவான்கள் புராதன சிவ புண்ணிய ஸ்தலங்களின் புனிதநிலைமையைப் பாதுகாப்பார்கள். திருமடங்கள் ஆசாரிய பீடங்கள் தழைத்தோங்கும். மக்கள் உழைப்புடையவர்களாக திருவுடன் வாழ்வார்கள். சகல பிரஜைகளும் உணவு உடை பிராப்தியுடன் ஆஸ்திக பண்புடையவர்களாகி க்ஷேமகரமாய் வாழ்வார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ – அ.)

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2 க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் பணச் செலாவணி எல்லாச் செலவுகளையும் சமாளிக்கும் வகையில் இருந்துவரும். குடும்ப நலம் பெருகும். கோ, மகிஷி, பால்பாக்கியம் பெருகும். மனைவி மைந்தர்கள் சுக சௌகரியத்துடன் இருப்பார்கள் 3, 6 க்குரிய புதன் நிலையால் சகோதரர்கள் இராசாங்க கௌரவத்துடன் விளங்குவார்கள். பந்து, அம்மான், சமூகத்தினர் ஒத்துழைப்புடனும் விசுவாசமுடனும் இருப்பார்கள். சத்துருவின் தொல்லைகள் நீங்கும். இம்மாதம் 8உ க்குமேல் செவ்வாய் மேஷராசியை அடைவதால் மனோவேகத்துக்குரிய சம்பவங்களும் கால் இடருதல்போன்ற விபத்தும்வந்து நீங்கும். பாக்கியாதிபதி குருவின் நிலையால் பிதா, குருமார்களிடப் பக்தியும் ஆசீர்வாத பாக்கியமடைவதுமாகும். சனி பார்வையால் பெற்றோருக்கு உடலில் வாயு உபத்திரவமும் உடன் வைத்தியத்தால் குணமாவதுமாகும். கிரியைகளில் அதிக முயற்சியும் காலதாமதத்தில் சாதகமும் ஏற்படும். விவசாயத் தொழிலில் நற்பலனடைய ஏதுவுண்டாகும் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஸ்திரமும் அரசாங்கத்தில் பெருமதிப்பும் ஏற்படும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம்½

(இ. உ. எ. – ஒ வ வி வு. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைத்தரும். 2 க்குரிய புதன் சஞ்சாரத்தால் தன வரவுக்கேற்ப செலவும் இருந்துவரும். குடும்பாபிவிருத்தி மேம்பாடாகவும் வாக்கு கௌரவமாகவும் இருந்துவரும் இம்மாதம் 8உ க்குமேல் செவ்வாய் மேஷராசியில் ஆட்சிபெறுவதால் ஸ்திர சொத்துக்காகவும் மனைவியின் நலனுக்காகவும் பொருட்செலவாகும். இம்மாதம் 16உ சிம்மராசியை அடையும் சுக்கிரன் சனி பார்வை பெறுவதால் தாயாருக்கு மயக்கம் வீடு வாகனங்களில் சில சங்கடங்கள் வந்து நீங்கும். புத்திரர் புத்திரிகளால் மகிழ்ச்சி

ஏற்படும். இயந்திர சாதனங்களில பழுதும் சீர்படுதலுமாகும். அஷ்டம இலாபாதிபதி அம்சக பலனால் பொது நலசேவை மிகும். சமூகத்தினர் ஆதரவு பலம் பெருகும். குறை கூறுபவர்களும் நேரில் ஒன்றும் சொல்ல இயலாமல் ஆத்துமபலத்துக்கு உட்பட்டவர்களாகவும் சிலாக்கியமாகப் பேசுபவர்களாகவும் மாறுவார்கள். கிரியாஸ்தானாதிபதியாகிய சனி மற்ற கிரகங்களின் சேர்க்கையால் சாஸ்திரோக்தமான விஷயங்களில் சிறப்புமேலிடும், செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அறிஞர்கள் போற்றுதலும் சான்றோர்கள் வாழ்த்துதலுமாகும்

3. மிதுனம்—மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை—புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ)

மிதுன ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடைபெறும். சுக்கிரன் சஞ்சாரத்தால் இம்மாதம் முற்பகுதியில் குடும்பத்தில் பணவசதி திருப்திகரமாகவும் பிற்பகுதியில் சீராகவும் இருந்துவரும். 3க்குரிய சூரியன் சனியுடன் சேர்ந்து சந்திர லக்கினத்தில் இருப்பதால் உடலில் அசதி, வாயு உபத்திரபம் வந்துநீங்கும். இப்மாதம் 18உ புதன் மிதுனராசியை அடைவதால் நெஞ்சுவலி நரம்புக்கோளாறுபோன்ற நலிவும் பெற்றோருக்கு உஷ்ணவாத நலிவும் வந்து நீங்கும். பந்து அம்மான்கள் மிச்சிரமாக நடந்துகொள்வார்கள். 6, 11 க்குரிய செவ்வாய் இம்மாதம் 8உ மேஷராசியை அடைவதால் சத்துரு ஜெயமும் சிவந்தநிற பொருள் பிராப்தியும் பூமி விருத்தியடைதலுமாகும். சப்தமதசமாதிபதி, சனிபார்வையால் மனைவி வகையில் ஓர் சங்கட நிலைமையும் பூர்வபொருள் ஆதாயத்தில் காலதாமதமும் சிரமமும் காட்டி நற்பலனையே அளிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சிரமபலனும் மந்தமும்போல் காட்டி செவ்வாயின் அனுகூலத்தால் காரிய ஜெயானுகூலத்தை ஏற்படுத்தும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே ஹோ. ட. – டி டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனைத்தரும். 2க்குரிய சூரியன் 12ல் இருந்தாலும் 11ல் வேறு கிரகம் இருப்பதால் பணச்செலாவணி நன்றாக இருந்துவரும். குடும்ப நலத்திற்காகவும் குலப்பெருமை சுரக்கவும் புத்திரர்களின் முன்னேற்றத்திற்காகவும் அதிக பொருட்செலவு ஏற்படினும் பெருமை பலன் மிகும் 3க்குரிய புதன் இம்மாதம் பிற்பகுதியில் வியம்பெறுவதால் சகோதரர் அல்லது பந்து அம்மான் வகையில் ஓர் சுபச்செலவையும் வித்தியார்த்திகளுக்கு உபகாரச் சம்பளம்

அளித்தல்போன்ற புண்ணியச் செலவுகளையும் ஏற்க நேரிடும். 4, 11 க்குரிய சுக்கிரன் சுபபலனுக்சஞ்சரிப்பதால் வாகன சௌகரியங்களும் பல வகையில் பணவரவும் ஆகும். வட்டி வாடகை முதலானவை வந்துசேரும், 6, 9 க்குரிய குரு நிலைமையால் பங்காளிகள் மூலம் சச்சரவும் பூர்வ பொருள்களில் குழப்ப நிலைமையும் காட்டி நீக்கும். வழக்கு வியாஜ்யங்களில் வெற்றியைக் கொடுக்கும். 5 க்குரிய செவ்வாய் கசமகேந்திரம் அடைந்ததால் புத்திரர்கள் நலமுடனும் தொழில் முன்னேற்றத்துடனும் விளங்குவார்கள் விவசாயத் தொழில் விருத்திகரமாக சிரமமின்றி செயல்படும். இயந்திர சாதனங்களால் அபிவிருத்தி பலன் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகம் திறமையுடன் நடந்துவரும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம மி. மு. மெ – மோ. டா. டி டு – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபபலனைத்தரும். 2 க்குரிய புதன் சஞ்சாரத்தால் பணவசதி சாளமாக இருந்துவரும். 3, 10 க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் இம்மாதம் முற்பகுதியில் சகோதர நன்மை ஜீவனத்துறை மேன்மை ஸ்திரீமூலிய சம்பத்து, விவாகாதிகள் முதலான நற்பலன்களை அளிக்கும். 4, 9 க்குரிய செவ்வாய் ஆட்சிப்பெற்று விபரீத வேதையாககுருவும் ஆட்சிப் பெற்றிருப்பதால் பூமி விருத்தி, வீடு வாகனம் வாங்குதல் பழுது பார்த்தல் ஆகிய ஆக்கம் ஏற்படும். சிவந்தபொருள்களின் பிராப்தி, புத்திர சம்பத்து, நல்லோர் பெரியோர்களிடம் ஆசீர்வாதம் பெறுதல் ஆகிய இலட்சுமி கடாட்சத்தை ஏற்படுத்தும். அந்தஸ்து மேலிடும் சஷ்ட சப்தமாதிபதி கிரகங்களின் சேர்க்கையால் சத்துரு மித்திரமாகுதலும், தீர்க்க ரோகங்கள் குணமாகுதலும், கணவன் மனைவிகள் கருத்து ஒற்றுமையும், சந்துஷ்டியாதி சம்பவங்களும் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் நல்ல ஆதாயமும் விவசாயத் தொழிலில் இயந்திர சாதனங்களால் விருத்திகரமும் ஏற்படும் செய்தொழில் அல்லது உத்தியோகம் இம்மாதம் முற்பகுதியில் சுறுசுறுப்பான போக்காகவும் பிற்பகுதியில் மந்தமுமாக செயல்படும்.

6. கன்னி– உத்திரம் பின் ¾ – ஹஸ்தம் – சித்திரை முன் ½

(டோ. ப பி. – பு ஷ ண ட. – பே போ)

கன்னியாராசி 9பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபபலனைத்தரும் 2 க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் பணவசதி திருப்திகரமாய் இருந்துவரும். குடும்பநலம் பெருகும் எதிர்பார்த்திருந்த மூலதனப் பிராப்தி நோக்கம்போல் வந்துசேரும்.

3 க்குரிய செவ்வாய் ஆட்சிபெற்று 7 இல் சுபராகிய குரு இருப்ப தால் எதிலும் மனோதைரியப்போக்கு ஏற்படும். நேருகின்ற இன்னல்கள் சச்சரவுகள் யாவும் மேலோரின் காருண்ய சகாயத் தால் நீங்கும். ஒருசிலரால் மனக்கஷ்டம் ஏற்படினும் வீடு வாகன வசதியில் சிறப்பும் தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சியும் ஏற்படும் 5, 6 க்குரிய சனி கிரகங்களின் சேர்க்கையால் புத்திரர் களின் கல்வி, தொழில் முதலியவற்றில் முன்னேற்றமும் தீர்க்க ரோகங்கள் விலகி சுகம் பெறுவதும் ஆகும் விக்துவத்தொழில் துறைகளில் அரசாங்கவனுகூலங்கள் ஏற்படும். இயந்திரசாதனங் களால் ஏற்படுகின்றபலனை கையாளுகின்றதிறன் ஏற்படும் தெய்வ வழிபாடு விரதானுஷ்டானங்களில் மனம் உறுதிபடும். தொழில் அல்லது உத்தியோகத்தில் மாற்றத்தையோ அல்லது பகுதி களாக பிரிவுகள் ஏற்பட்டு சுய நிர்வாகத்தையோ ஏற்படுத்தும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே ரோ. தா. – தி. து தே.)

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும் 2. 7 க்குரிய செவ்வாய் இம்மாதம் 8உ 7 இல் ஆட்சிபெற்று அதன் நற்பலஸ்தானத்தில் குரு இருப்பதால் தனவசதி பெருமை பொருந்தியதாக இருக்கும். குடும்பத்தில் விகுவானபோக்கில் சுபகரம் ஏற்படும் சகோதரர்கள் அனுசர ணையாக இருப்பார்கள். 4 5 க்குரிய சனி 11 க்குரிய சூரியன் இவர்கள் நிலைமையால் இயந்திரவாகனம் வீடு இவற்றில் நூதன வகை ஏற்பாடுகளும், மூலதனம் பூமி இவற்றில் பாகப் பிரிவினை களும் ஏற்படும். மனைவி வகையில் இருந்துவந்த குழப்பங்கள் நீங்கி தனபிராப்தியை ஏற்படுத்தும். புத்திரர்களின் கல்வி, தொழில்கள் முன்னேற்றமடையும். எழுத்து மூலிய லேவாதேவி கள் ஆதாயமாக இருக்கும் வட்டி வாடகை குத்தகைப்பணம் சற்று காலதாமதமாக வந்துசேரும். வியாஜ்ய வழக்குகளில் நிருபணார்த்தங்களும் ஜெயமும் ஏற்படும். பாக்கியாதிபதி புதன் சஞ்சாரத்தால் ஆடம்பர வஸ்துக்களில் ஆர்வமும், நூதன கருவி களைக் கையாளுவதும் அவற்றை விற்பது வாங்குவதில் நல்ல ஆதாயமும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அந்தஸ்துமேலிடும்.

8. விருச்சிகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ – ந நி. நு நெ. - நோ ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாசம் சுமா ரான பலனைத்தரும். 2 க்குரிய குரு நற்பலஸ்கானத்தில் இருப் பதால் தனவசதி பெருமை பொருந்தியதாக இருப்பினும், சனி

பார்வையால் குடும்பத்தில் பூசலான சம்பவமும் புத்திரகிலேசமுமாக இருக்கும். 3, 4 க்குரிய சனி கிரகங்களின் சேர்க்கையால் சகோதரசகோதரிகளின் குடும்பநலம் சிறப்புடன் இருந்துவரும். பந்து அம்மான் முதலியோர் விசுவாசத்துடனும் உதவிகரமாகவும் இருப்பார்கள். பெற்றோர்களின் உடல் நலிவு நீங்கி குணமாவதாகும். செவ்வாய் இம்மாதம் 8உ 6 ஆம் இடத்தில் ஆட்சி பெறுவதால் சத்துருமித்திரமாகுதலும், இருணங்கள் தீர்ந்து சுமையின்றி இருத்தலும் நிம்மதியளிக்கும். களத்திரத்துக்கு இரத்த பித்தரோகம் காட்டி உடன் குணமாகுதலாகும். பாக்கியஸ்தானத்தில் இருக்கும் சுக்கிரனால் தர்மானுஷ்டானமான செயல் முறைகள், விவாகோற்சவ சம்பவங்கள் முதலான நற்பலன்கள் ஏற்படும். மதிநுட்பமானசெயல்களில் உழைப்புக்கேற்றபடி பயனடையஏதுவாகும். நீர் இயந்திரசாதனங்களால்விவசாயத்தொழிலில் முன்னேற்றம்காணும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இராசாங்க கௌரவமும் இலாபபிராப்தியும் ஏற்படும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனைத்தரும். 2 க்குரிய சனி மிச்சிரனாக இருப்பதால் தனவசதி சீராக இருக்கும். குடும்பத்தில் பெற்றோர் சம்பந்தமாக கவலையும் சகோதர குடும்பத்தில் சிரமபலனுமாக இருப்பினும், இம்மாத பிற்பகுதியில் அவை நீங்கும். கல்வி கலைத்துறையில் பூரண உழைப்பும், அரசாங்கத்தால் சிறப்பும் ஏற்படினும் ம[illegible]வாட்டமான நிலைமையாக இருந்துவரும். 4 க்குரிய குருவின் நிலையால் இருப்பிடத்தில் குழப்பமான நிலைமையும் மாற்றாரின் தொல்லைகளும் ஏற்படினும் உடன் அனுகூலஸ்தர்களால் சகாயங்கள் ஏற்படும். 5, 12 க்குரிய செவ்வாய் இம்மாதம் 8உ மேஷராசியை அடைவதால் வயிற்றில் வலியும் இதயத்தில் படபடப்பும் வந்து குணமாகும். 6, 11 க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் கணவன் மனைவியின் வாழ்க்கையில் நிம்மதியற்ற சூழ்நிலையும் பொருளாதாரசம்பந்தமான நம்பிக்கைமோசசம்பவமும் நிகழும். 7, 10 க்குரிய புதன் சஞ்சாரத்தால் எழுத்துமூலிய நடவடிக்கைகளில் குழப்ப நிலைமையாகவும் மதிநுணுக்கத்தால் சமாளிக்கும் ஆற்றலையும் ஏற்படுத்தும் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சுறுசுறுப்பு மிகுந்து காணும்

10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ ஜ ஜி. – கி. கு கே கோ – க கீ.)

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2 க்குரிய சனி சுப பலனாக இருப்பதால் தனவசதி

திருப்திகரமாக இருந்துவரும். குடும்பம் சுபிட்சமாக இருந்து வரும். 3 க்குரிய குரு மிச்சிரனாக இருப்பதால் சகோதரர் புத்திரர் சம்பந்தமாக செலவும் பிறரால் சில சங்கடமும் ஏற்படும். ஆயினும் 6 இல் வலுப்பெற்ற கிரகங்களால் எவ்வித அல்லல்களையும் சமாளிக்கும் ஆற்றலைக் கொடுக்கும். சத்துருக்கள் நேசமாவதற்குரிய சாதுர்ய நடைமுறை ஏற்படும். பலதரப்பட்ட மக்கள் சவகாசம் ஏற்பட்டு வியாபாராதி தொழில் துறைகளில் பிரசித்தம் உண்டாகும். இம்மாதம் 8உ மேஷராசியை அடையும் செவ்வாய் வேதையில் கிரகம் இருப்பதால் சுய முயற்சியில் பூமி கட்டட சேர்க்கையை ஏற்படுத்தும். பூர்வ சொத்தில் பாகங்கள் வந்தடையும். புதன் சஞ்சாரத்தால் பந்து அம்மான்கள் விசுவாசமாகக் கூடுவார்கள். 5, 10 க்குரிய சுக்கிரன் சஞ்சாரத்தால் இம்மாதம் பிற்பகுதியில் புத்திரிகளில் ஒருவருக்கு சுபமும், பெண் வகையால் ஏற்பட்ட சொத்தில் சிறிது குழப்பத்திற்கிடையே நற்பலனும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் உழைப்பு அதிகமாயினும் ஆதாயத்தை ஏற்படுத்தும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி–¾

(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு, – ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2, 11 க்குரிய குரு நற்பலஸ்தானத்தில் இருப்பதால் பணம் வேண்டுங்காலத்தில் வந்துசேரும். குடும்பம் மேன்மையுடன் சிறந்து விளங்கும். சனி பார்வையால் குடும்ப சுமை மிகுந்துகாட்டும். வரவும் செலவும் சரிசமமாக இருந்து வரும். 3, 10 க்குரிய செவ்வாய் ஆட்சிபெற்றதால் சகோதரர் குடும்பம் மேன்மையுடன் விளங்கும். கிரியாமேன்மையும் ஜீவனத் துறையில் மாற்றமும் ஏற்படும். 5 இல் உள்ள கிரகங்களினால் புத்திரர்களுக்கு உடல் நலிவு வந்து குணமாகும் வயிற்றுக் கோளாறு வாயு பிரட்டல் போன்ற தொல்லைகள் காட்டி குணப்படுத்தும். மித்திரர்களும் சத்துருபோல் தோன்றுவர். பந்து அம்மான்கள் சாதாரணமாக நடந்துகொள்வர். சுக்கிரன் நிலைமையால் கால்நடைவாகனத்துக்கு பீடையும் பெற்றோருக்கு அதிஷ்டமும் காட்டி நீக்கும். மனைவி வகையினரால் சிரமங்களும் வாழ்க்கையில் சலிப்பும் ஏற்படினும் சமாளிக்கும் ஆற்றல் மிகும். சிறுநீர் உபத்திரபம்வந்து உடன் நீங்கும். பிதா சொத்தில் சிறிது விரயம் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகம் திறமையுடனும் சிறப்புடனும் நடைபெறும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனுக நடக்கும். 2 க்குரிய செவ்வாய் மிச்சிர பலனுக இருப்பதால் பண வசதி சீராக இருந்துவரும். குடும்ப சச்சரவு, வாக்கு பாருஷ்யம் ஏற்படினும் தீமை ஏற்படாது. சுக்கிரன் சஞ்சாரத்தால் சகோதரர் குடும்பத்தில் மன விசன சம்பவங்கள் வந்து மறையும். 4, 7 க்குரிய புதன் சஞ்சாரத்தால் வித்துவத்தும் கலை முதலியவற்ருலும், கருவி சாதனங்களினுலும் நல்ல ஆதாயங்கள் இருந்துவரும். பந்து அம்மான்கள் விசுவாசமாக இருந்துவருவார்கள். இயந்திர வாகன சாதனங்களினுல் விருத்திகரமான நிலைமையாக இருக்கும். 6 க்குரிய சூரியன் 11, 12 க்குரிய சனி இவர்களால் வீடு, இயந்திரக் கருவிகளின் மூலம் சௌகரியம் ஒரு புறம் இருப்பினும், அரசாங்கத் தவணை நிர்பந்தம் ஒருபுறம் இருந்துவரும். குருவின் நிலைமையால் இம்மாதம் 9 உக்குமேல் புத்திரர்களின் வித்துவத்துறையில் சிறப்பும், அதனுல் மன உவகையையும் ஏற்படுத்தும். முன் செய்த புண்ணிய செயல்களினுல் பெருமதிப்பு உண்டாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் விருப்புவெறுப்பின்றி இயந்திரம்போல் செயல்படுவதாகும்.

கடிதம்

கி. வா. ஜகந்நாதன். தூத்துக்குடி – 3
7—5—75.

கலியின் கொடுமை மிகுந்தாலும்
கருணைச் சிவன்தான் காப்பனென
மலியும் பெருநம் பிக்கைகொடு
மாண்பார் சிவமா நெறிவளர்த்துப்
பொலியும் தருமை யாதீனம்
பொற்பார் தலைவ, சண்முகப்பேர்
ஒலிகொள் புகழோ டோங்குகின்ற
ஒருதே சிகமெய்த் தவமணியே!

தருமை ஓங்கும் ஆதீனம்
தழைத்து வாழி! நின்னலங்கள்
பெருமை யோடு மிகவளர்ந்து
பெருகி வாழி! சிவசமயத்
தருமை யுணர்ந்த தொண்டர்குழாம்
அடங்க வாழி! மாநிலத்தில்
தருமம் பெருகி வாழி! எங்கும்
சாந்தி நிரப்பி வாழியவே!